# செயல்முறை திட்டம்
# 2021 – 2022

## பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

©
தமிழ்நாடு அரசு
2021

**பொருளடக்கம்**


| வரிசை எண் | விவரம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | இடஒதுக்கீடு | 4 |
| 3 | பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்கங்களின் கடந்த ஐந்து ஆண்டுகளின் நிதி ஒதுக்கீடு | 4 |
| 4 | கல்வி உதவித் தொகை திட்டங்கள் | 5 |
| 5 | கள்ளர் சீரமைப்பு பள்ளிகள் | 9 |
| 6 | சீர்மரபினர் நல வாரியம் | 14 |
| 7 | தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் | 14 |
| 8 | தமிழ்நாடு வன்னியகுலசத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம் | 15 |
| 9 | தமிழ்நாடு சாதிவாரியான அளவிடக்கூடிய முழுமையான புள்ளி விவர சேகரிப்பு ஆணையம் | 16 |
| 10 | சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது | 16 |
| 11 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த கிராமப்புற மாணவியருக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்குதல் | 16 |
| 12 | சீருடைகள் வழங்குதல் | 17 |
| 13 | உணவு மானியம் வழங்குதல் | 18 |
| 14 | விடுதிகள் | 18 |
| 15 | இலவச மிதிவண்டிகள் வழங்குதல் | 22 |
| 16 | இலவச தையல் இயந்திரம் வழங்குதல் | 24 |
| 17 | இலவச சலவைப் பெட்டி வழங்குதல் | 24 |
| 18 | இலவச வீட்டுமனைப்பட்டா வழங்குதல் | 25 |
| 19 | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் | 25 |
| 20 | சிறுபான்மையினர் நல இயக்ககம் | 27 |
| 21 | தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் | 47 |
| 22 | தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 53 |
| 23 | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | 56 |
| 24 | தமிழ்நாடு வஃக்ப் வாரியம் | 57 |
| 25 | தமிழ்நாடு மாநில ஹஜ் குழு | 60 |

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

# செயல்முறை திட்டம் 2021–2022

## 1. முன்னுரை

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனை பாதுகாப்பதையும் மற்றும் அவர்களது சமூக, கல்வி நிலையை உயர்த்துவதையும் தமிழக அரசு முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இக்குறிக்கோளை அடைவதற்கு தமிழக அரசு பல்வேறு சிறப்பான நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

கல்வியில் உயர்வடையாத எந்த நாட்டையும் உண்மையிலேயே வளர்ச்சியடைந்த நாடு என்றழைக்க முடியாது. இந்தக் கருத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்து மக்களின் பிற்படுத்தப்பட்ட தன்மையை நீக்குவதற்காக இவ்வரசு கல்வித் திட்டங்களை செயல்படுத்துவதற்கு மிக அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்கிறது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசு செயலாளரின் தலைமையில் இயங்கி வருகிறது. மாநில அளவில் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலத் திட்டங்களையும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்திட்டங்களையும், சிறுபான்மையினர் நல இயக்குநர் சிறுபான்மையினர் நலத்திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றனர்.

மாவட்ட அளவில் இத்திட்டங்கள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. இவ்வலுவலர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேரடி நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றனர். மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் வாழும் பிரமலைக் கள்ளர் வகுப்பைச் சார்ந்தவர்களின் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள், மதுரையைத் தலைமையிடமாக கொண்டு இயங்கும் கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநர் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்தும்பொருட்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (TABCEDCO) 1982இல் நிறுவப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள சிறுபான்மையினரின் பொருளாதார முன்னேற்றத்திற்கு என தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (TAMCO) 1999 –2000 இல் நிறுவப்பட்டது.

மதவழி மற்றும் மொழிவழி சிறுபான்மையினர் நலன்களையும், உரிமைகளையும் பாதுகாக்கும் பொருட்டு 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம் அரசால் ஏற்படுத்தப்பட்டது.

மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் ஆணைகளுக்கிணங்க, ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசரின் தலைமையில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டு செயல்பட்டுவருகிறது.

தமிழ்நாடு வன்னிய குல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணி வருதல்) சட்டம் 2018 (தமிழ்நாடு சட்டம் 44/2018) சட்டத்தின் கீழ் தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

வக்ஃபு சொத்துகளை சரியான முறையில் பராமரிப்பதற்காகவும் மற்றும் பாதுகாப்பதற்காகவும் வக்ஃப் தொடர்பான அலுவல்களை நிர்வகிப்பதற்காகவும் தமிழ்நாடு வக்ஃபு வாரியம் செயல்பட்டு வருகிறது. ஹஜ் புனித பயணத்திற்கான பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு தமிழ்நாடு மாநில ஹஜ் குழு செயல்பட்டு வருகிறது. வக்ஃப்கள் மற்றும் வக்ஃப் சொத்துக்கள் தொடர்பாக எழும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஏதுவாக வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 83–ன்படி தலைவர் மற்றும் 2 உறுப்பினர்களை கொண்டு தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம் சென்னையில் அமைக்கப்பட்டு 06.08.2018 முதல் செயல்பட்டு வருகிறது.

மாநிலத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் மேம்பாட்டிற்கான அரசின் நலத்திட்டங்களை செயல்படுத்த தமிழ்நாடுஅரசு ஒவ்வொரு ஆண்டும் கணிசமான அளவில் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.

## 2. இடஒதுக்கீடு

அரசு பணிகளில் நியமனங்கள் மற்றும் கல்வி நிலையங்களில் மாணவ, மாணவியர் சேர்க்கையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு இடஒதுக்கீடு அளிக்கப்பட்டு வருகிறது. இதனால் இவர்கள் கல்வி மற்றும் மாநில அரசுத் துறையில் வேலைவாய்ப்பு பெற்று சமூக மற்றும் பொருளாதார ரீதியில் மேம்பாடு அடைய வழிவகை செய்கிறது. தற்போது வழங்கப்படும் இடஒதுக்கீட்டின் அளவு விவரம் பின்வருமாறு :–

| | |
|---|---|
| பிற்படுத்தப்பட்டவகுப்பினர் | 26.5 விழுக்காடு |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள் | 3.5 விழுக்காடு |
| மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர்<br>* Part I – வன்னியகுல சத்திரியர் – 10.5 %<br>*Part II – மிபிவ மற்றும் சீர்மரபினர் –7.0 %<br>*Part III – மிபிவ – 2.5 % | 20 விழுக்காடு |
| ஆதிதிராவிடர் | 18 விழுக்காடு |
| பழங்குடியினர் | 1 விழுக்காடு |
| **மொத்தம்** | **69 விழுக்காடு** |

3. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களுக்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் நிதி ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | ஆண்டு | நிதி ஒதுக்கீடு | | |
|---|---|---|---|---|
| | | பிவ | மிபிவ/சீம | மொத்தம் |
| 1. | 2016–2017 | 51226.00 | 51497.07 | 102723.07 |
| 2. | 2017–2018 | 47503.45 | 49978.89 | 97482.34 |
| 3. | 2018–2019 | 47910.93 | 49375.70 | 97286.63 |
| 4. | 2019–2020 | 41716.16 | 45716.24 | 87432.40 |
| 5. | 2020–2021 | 45173.67 | 53680.62 | 98854.29 |

## 4. கல்வி உதவித் தொகை திட்டங்கள்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ மாணவியரின் கல்வி முன்னேற்றத்திற்காக பின்வரும் திட்டங்களின் கீழ் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

அ. பள்ளிப் படிப்பு உதவித் தொகை

ஆ. பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை

இ. மூன்றாண்டு கலை மற்றும் அறிவியல் பட்டப் படிப்புகளுக்கு இலவசக் கல்வி உதவித் தொகை திட்டம்

ஈ. பாலிடெக்னிக்குகளில் மூன்று வருட பட்டயப்படிப்புகளுக்கு இலவசக் கல்வி உதவித்தொகை திட்டம்

உ. தொழிற்கல்வி படிப்புகளுக்கு இலவசக்கல்வி உதவித்தொகை திட்டம்

ஊ. ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் இளநிலை/ முதுநிலை பயிலும் தமிழ்நாட்டைச் சார்ந்த மாணவ/மாணவியருக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகைத் திட்டம்

4 (i). **கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டங்களின் கீழ் கடந்த 5 ஆண்டுகளில் பயனடைந்தோர் மற்றும் செலவின விவரம்.**

**அ. பள்ளிப் படிப்பு உதவித் தொகை**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | ஆண்டு | பயனடைந்தோர் மற்றும் செலவின விவரம் | |
|---|---|---|---|
| | | பயனாளிகள் | நிதி |
| 1 | 2016–17 | 128210 | 303.27 |
| 2 | 2017–18 | 130340 | 301.08 |
| 3 | 2018–19 | 348530 | 670.71 |
| 4 | 2019–20 | 117822 | 180.05 |
| 5 | 2020–21 | 116296 | 133.68 |

**ஆ. பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | ஆண்டு | பயனடைந்தோர் மற்றும் செலவின விவரம் | |
|---|---|---|---|
| | | பயனாளிகள் | நிதி |
| 1 | 2016–17 | 319623 | 8868.66 |
| 2 | 2017–18 | 228661 | 8317.93 |
| 3 | 2018–19 | 258644 | 8365.21 |
| 4 | 2019–20 | 305073 | 8202.80 |
| 5 | 2020–21 | 314293 | 6929.06 |

இ. இலவச கல்வி (மூன்றாண்டு கலை மற்றும் அறிவியல் பட்டப் படிப்புகள்)

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | ஆண்டு | பயனடைந்தோர் மற்றும் செலவின விவரம் | |
|---|---|---|---|
| | | பயனாளிகள் | நிதி |
| 1 | 2016–17 | 203586 | 3340.39 |
| 2 | 2017–18 | 182165 | 3069.02 |
| 3 | 2018–19 | 180077 | 3181.93 |
| 4 | 2019–20 | 183442 | 3484.19 |
| 5 | 2020–21 | 194268 | 3730.66 |

ஈ. இலவச கல்வி (மூன்றாண்டு பட்டயப் படிப்புகள்)

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | ஆண்டு | பயனடைந்தோர் மற்றும் செலவின விவரம் | |
|---|---|---|---|
| | | பயனாளிகள் | நிதி |
| 1 | 2016–17 | 7160 | 268.45 |
| 2 | 2017–18 | 5314 | 200.62 |
| 3 | 2018–19 | 4687 | 183.43 |
| 4 | 2019–20 | 3664 | 152.88 |
| 5 | 2020–21 | 2848 | 113.91 |

உ) இலவசக்கல்வி ( தொழிற் கல்வி படிப்புகள்)

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | ஆண்டு | பயனடைந்தோர் மற்றும் செலவின விவரம் | |
|---|---|---|---|
| | | பயனாளிகள் | நிதி |
| 1 | 2016–17 | 193930 | 9807.41 |
| 2 | 2017–18 | 165088 | 8343.94 |
| 3 | 2018–19 | 148864 | 7673.97 |
| 4 | 2019–20 | 130731 | 6987.08 |
| 5 | 2020–21 | 116148 | 5362.70 |

**ஊ) பட்டியலிடப்பட்ட ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவ/ மாணவியருக்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகைத் திட்டம்**

தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் உள்ள பட்டியலிடப்பட்ட ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவியருக்கு நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரை கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.2 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின் கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் 213 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் 126.90 இலட்சம் செலவிடப்பட்டது.

**4 (ii). கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டங்களின் கீழ் கடந்த 5 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினம் மற்றும் பயனடைந்தோர் விவரம்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | ஆண்டு | பயனடைந்தோர் மற்றும் செலவின விவரம் | |
|---|---|---|---|
| | | பயனாளிகள் | நிதி |
| 1 | 2016-17 | 852509 | 22588.18 |
| 2 | 2017-18 | 711568 | 20232.59 |
| 3 | 2018-19 | 940802 | 20075.25 |
| 4 | 2019-20 | 740732 | 19006.96 |
| 5 | 2020-21 | 743853 | 16270.01 |

**4 (iii). ஒன்றிய அரசின் படிப்பு உதவித்தொகை திட்டங்கள்**

தமிழ்நாட்டிலுள்ள இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஒன்றிய அரசின் படிப்பு உதவித்தொகை திட்டம் 2003-2004 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட செலவின விவரம் பின்வருமாறு :

அ. **பள்ளிப் படிப்பு உதவித் தொகை திட்டம்** (ஒன்றிய மற்றும் மாநில அரசின் 50: 50 பங்கீட்டின் கீழ் செயல்படுத்தப்படுகிறது)

(ரூபாய் இலட்சத்தில்)

| **வ. எண்.** | **ஆண்டு** | **ஒதுக்கீடு** | **செலவினம்** |
|---|---|---|---|
| 1 | 2016–17 | 1954.98 | 1574.00 |
| 2 | 2017–18 | 380.98 | 380.98 |
| 3 | 2018–19 | 1180.50 | 1180.50 |
| 4 | 2019–20 | 2470.00 | 2470.00 |
| 5 | 2020–21 | 2840.00 | 2613.50 |

ஆ. **பள்ளி மேற்படிப்பு உதவித்தொகை திட்டம் (ஒன்றிய அரசின் உதவி** 100 **சதவீதம்**)

(ரூபாய் இலட்சத்தில்)

| **வ. எண்.** | **ஆண்டு** | **ஒதுக்கீடு** | **செலவினம்** |
|---|---|---|---|
| 1 | 2016–17 | 5445.97 | 4998.00 |
| 2 | 2017–18 | 4550.00 | 4997.98 |
| 3 | 2018–19 | 6142.00 | 6142.00 |
| 4 | 2019–20 | 7575.00 | 7575.00 |
| 5 | 2020–21 | 11481.00 | 11481.00 |

இ. **டாக்டர் அம்பேத்கர் பள்ளிப்படிப்பு மற்றும் பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டம்** (ஒன்றிய மற்றும் மாநில அரசின் 75 : 25 பங்கீட்டின் கீழ் செயல்படுத்தப்படுகிறது)

தமிழ்நாட்டிலுள்ள சீர்மரபினர் இனத்தவருக்கான ஒன்றிய அரசின் பள்ளிப்படிப்பு மற்றும் பள்ளிமேற்படிப்பு கல்விஉதவித்தொகை திட்டம் 2019–2020 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட செலவின விவரம் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| **ஆண்டு** | **ஒதுக்கீடு** | **செலவினம்** |
|---|---|---|
| 2019–2020 (ம)<br>2020–2021 | 293.34 | 293.34 |

## 5. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்

பிரமலைக்கள்ளர் வகுப்பினர் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் அதிக அளவில் வசித்து வருகின்றனர். இம்மக்களின் கல்வி மேம்பாட்டிற்காக இம்மூன்று மாவட்டங்களிலும் 295 கள்ளர் பள்ளிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அப்பள்ளிகளில் மொத்தம் 27,060 மாணவ மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

### 5(i) கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் விவரம்

| வகைப்பாடு | மாவட்டங்கள் | | | |
|---|---|---|---|---|
| | மதுரை | தேனி | திண்டுக்கல் | மொத்தம் |
| தொடக்கப்பள்ளிகள் | 105 | 62 | 46 | 213 |
| நடுநிலைப்பள்ளிகள் | 10 | 7 | 5 | 22 |
| உயர்நிலைப்பள்ளிகள் | 15 | 4 | 3 | 22 |
| மேனிலைப்பள்ளிகள் | 19 | 11 | 8 | 38 |
| மொத்தம் | 149 | 84 | 62 | 295 |

### 5(ii) கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவ/மாணவியர் எண்ணிக்கை

| வ. எண் | பள்ளிகள் விவரம் | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணாக்கர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | மாணவர்கள் | மாணவியர் | மொத்தம் |
| 1. | தொடக்கப்பள்ளிகள் 1 முதல் 5 வகுப்பு முடிய (மற்றும்) மழலையர் வகுப்பு (LKG) உட்பட | 213 | 5334 | 5150 | 10484 |
| 2. | நடுநிலைப் பள்ளிகள் | 22 | 793 | 788 | 1581 |
| 3. | உயர்நிலைப் பள்ளிகள் | 22 | 1377 | 1143 | 2520 |
| 4. | மேனிலைப் பள்ளிகள் | 38 | 6694 | 5781 | 12475 |
| **மொத்தம்** | | **295** | **14198** | **12862** | **27060** |

### 5 (iii). அரசு கள்ளர் பள்ளிகளில் மழலையர் (LKG மற்றும் UKG) வகுப்புகள்

மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு தலா 5 பள்ளிகள் வீதம் மொத்தம் 15 கள்ளர் சீரமைப்பு ஆரம்பப் பள்ளிகளில், ஆங்கில வழி மழலையர் வகுப்புகளும் (LKG) இதே போன்று இம்மூன்று மாவட்டங்களில், ஒரு மாவட்டத்திற்கு தலா 5 மேல்நிலைப் பள்ளிகள் வீதம் 15 மேல்நிலைப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் ஆங்கில வழி கல்வி வகுப்புகளும் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. ஆங்கில வழி வகுப்புகளில் 1,318 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

| மாவட்டம் | மழலையர் வகுப்பு (LKG) | | | மழலையர் வகுப்பு (UKG) | | | 1 முதல் 5 ஆங்கில வழி | | | 6 முதல் 8 ஆங்கில வழி | | | பெரு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாணவர்கள் | மாணவிகள் | மொத்தம் | மாணவர்கள் | மாணவிகள் | மொத்தம் | மாணவர்கள் | மாணவிகள் | மொத்தம் | மாணவர்கள் | மாணவிகள் | மொத்தம் | |
| மதுரை | 32 | 33 | 65 | 45 | 44 | 89 | 42 | 40 | 82 | 132 | 71 | 203 | **439** |
| தேனி | 47 | 36 | 83 | 53 | 44 | 97 | 88 | 99 | 187 | 84 | 127 | 211 | **578** |
| திண்டுக்கல் | 16 | 19 | 35 | 43 | 37 | 80 | 62 | 50 | 112 | 45 | 29 | 74 | **301** |
| **மொத்தம்** | **95** | **88** | **183** | **141** | **125** | **266** | **192** | **189** | **381** | **261** | **227** | **488** | **1318** |

### 5 (iv).2019-2020 ஆம் கல்வியாண்டில் 11 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் கள்ளர் பள்ளிகளின் தேர்ச்சி விழுக்காடு.

| வ. எ | மாவட்டம் | 11ஆம் வகுப்பு | | | 12ஆம் வகுப்பு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தேர்வு எழுதியோர் | தேர்ச்சி பெற்றோர் | தேர்ச்சி விழுக்காடு | தேர்வு எழுதியோர் | தேர்ச்சி பெற்றோர் | தேர்ச்சி விழுக்காடு |
| 1. | மதுரை | 1022 | 993 | 97.2 | 958 | 914 | 95.4 |
| 2. | திண்டுக்கல் | 294 | 276 | 93.9 | 242 | 214 | 88.4 |
| 3. | தேனி | 423 | 394 | 93.1 | 397 | 346 | 87.2 |
| | **மொத்தம்** | 1739 | 1663 | 95.6 | 1597 | 1474 | 92.3 |

**2019–2020 ஆம் கல்வியாண்டில் கொரனா பெருந்தொற்று காரணமாக 10ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் அனைத்து மாணவ/மாணவியர்களும் 100 விழுக்காடு தேர்ச்சி பெற்று விட்டதாக தமிழக அரசு அறிவித்தது.**

**2020–2021 ஆம் கல்வியாண்டில் கொரனா பெருந்தொற்று காரணமாக 10ஆம் வகுப்பு, 11ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் அனைத்து மாணவ/மாணவியர்களும் 100 விழுக்காடு தேர்ச்சி பெற்று விட்டதாக தமிழக அரசு அறிவித்தது.**

**5 (v). 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் ஒவ்வொரு பாடப் பிரிவிலும் மாணவ / மாணவியரை 100 விழுக்காடு தேர்ச்சி பெறச் செய்யும் பட்டதாரி/ முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம்.**

| வ. எண் | ஆசிரியர் விவரம் | 2017–18 ம் நிதி ஆண்டு | | 2018–19 ம் நிதி ஆண்டு | | 2019–20 ம் நிதி ஆண்டு | | 2020–21 ம் நிதி ஆண்டு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | செலவினம் (ரூ) | எண்ணிக்கை | செலவினம் (ரூ) | எண்ணிக்கை | செலவினம் (ரூ) | எண்ணிக்கை | செலவினம் (ரூ) |
| 1. | பட்டதாரி ஆசிரியர் | 198 | 990000 | 191 | 955000 | 191 | 955000 | -- | -- |
| 2. | முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் | 229 | 1145000 | 225 | 1125000 | 271 | 1355000 | 235 | 1175000 |
| | **மொத்தம்** | **427** | **2135000** | **416** | **2080000** | **462** | **2310000** | **235** | **1175000** |

**குறிப்பு:** 2019–2020, 2020–2021 ஆம் கல்வியாண்டில் கொரானா பெருந்தொற்று காரணமாக 10ஆம் வகுப்பு அரசுப்பொதுத்தேர்வில் அனைத்து மாணவ/ மாணவியர்களும் 100 விழுக்காடு தேர்ச்சி பெற்று விட்டதாக தமிழக அரசு அறிவித்ததை தொடர்ந்து பட்டதாரி ஆசிரியர்களுக்கு பரிசுத் தொகை வழங்கப்படவில்லை.

**5 (vi). 10 மற்றும் 12–ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 95 விழுக்காடு மற்றும் அதற்கு அதிகமாக தேர்ச்சி விழுக்காடு அடையச் செய்யும் அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்கும் திட்டம்**

| வ. எண் | நிதி ஆண்டு | 10ஆம் வகுப்பு | | 12 ஆம் வகுப்பு | |
|---|---|---|---|---|---|
| | | பயனாளிகள் | செலவினம் (ரூ) | பயனாளிகள் | செலவினம் (ரூ) |
| 1. | 2016–17 | 43 | 430000 | 18 | 180000 |
| 2. | 2017–18 | 43 | 430000 | 20 | 200000 |
| 3. | 2018–19 | 40 | 400000 | 18 | 180000 |
| 4. | 2019–20 | 39 | 390000 | 28 | 280000 |
| 5. | 2020–21 | 60 | –இல்லை– | 17 | 170000 |

**குறிப்பு:** 2019–2020 ஆம் கல்வியாண்டில் கொரானா பெருந்தொற்று காரணமாக 10ஆம் வகுப்பு அரசுப்பொதுத்தேர்வில் அனைத்து மாணவ/ மாணவியர்களும் 100 விழுக்காடு தேர்ச்சி பெற்று விட்டதாக தமிழக அரசு அறிவித்ததை தொடர்ந்து உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு பரிசுத் தொகை வழங்கப்படவில்லை.

**5 (vii). அரசு கள்ளர் பள்ளிக் கட்டடங்களின் பெரும் பழுதுகள்/ மின் பராமரிப்பு பணி சரி செய்திட ரூ. 5.00 கோடி நிதி ஒதுக்கீடு (2020–2021)**

கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளுக்காக ஆண்டுதோறும் ரூ.1 கோடி அரசு ஒதுக்கீடு செய்து வருகிறது. 2020–2021 ஆம் ஆண்டில் இதனுடன் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.5 கோடி மதிப்பீட்டில் 186 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**5 (viii). ஊரக அடிப்படை வசதி வளர்ச்சி நிதி (RIDF) திட்டத்தின் கீழ்நபார்டு வங்கியின் மூலம் நிதி உதவி பெற்று பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல்.**

2018–19 ஆம் ஆண்டிற்கான நபார்டு RIDF XXIV திட்டத்தின் கீழ் 99 அரசு கள்ளர் பள்ளிகளுக்கு ரூ.2507.53 இலட்சம் செலவில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித்தர நபார்டு வங்கியிடமிருந்து நிதி உதவி பெற்று உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தர அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

**5 (ix) கள்ளர் சீரமைப்பு பள்ளிகளுக்கு கடந்த 5 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்வாக செலவின விவரம்**

| ஆண்டு | செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 2016–17 | 7894.68 |
| 2017–18 | 9136.24 |
| 2018–19 | 10626.34 |
| 2019–20 | 11780.62 |
| 2020–21 | 12169.78 |

## 6. சீர்மரபினர் நல வாரியம்.

சீர்மரபினர் வகுப்பினரின் சமூக, கல்வி, பொருளாதார மேம்பாட்டிற்காக அரசு வழங்கும் பல்வேறு நலத்திட்டங்களை அவர்களுக்கு வழங்குவதற்கு சீர்மரபினர் நல வாரியம் 2007–2008 ஆம் ஆண்டில் அரசால் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இதுவரை 34959 உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு 3398 உறுப்பினர்களுக்கு ரூ.80.91 இலட்சம் செலவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 5 ஆண்டுகளில் வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகளின் செலவின விவரம் பின்வருமாறு :

| ஆண்டு | செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 2016–17 | 5.48 |
| 2017–18 | 2.66 |
| 2018–19 | 7.42 |
| 2019–20 | 9.83 |
| 2020–21 | 2.77 |

வலையர், அம்பலக்காரர் (சேர்வை உட்பட) இனத்தை சேர்ந்த மக்களின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்த "வலையர் அம்பலக்காரர் (சேர்வை உட்பட) புனரமைப்பு வாரியம்" அமைத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

## 7. தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்

நரிக்குறவர்களுக்கு கல்வி, மாற்றுத்தொழில் புரிவதற்கான உதவி மற்றும் அவர்களுக்கு பல்வேறு நல உதவிகள் வழங்குவதற்காக தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் 2008–09 ம் ஆண்டில் அரசால் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இதுவரை 15576 உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு 13932 உறுப்பினர்களுக்கு ரூ.781.35 இலட்சம் செலவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த 5 ஆண்டுகளில் வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகளின் செலவின விவரம் பின்வருமாறு:

| ஆண்டு | செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 2016–17 | 61.29 |
| 2017–18 | 75.00 |
| 2018–19 | 17.07 |
| 2019–20 | 18.36 |
| 2020–21 | 8.25 |

## 8. தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம்

தமிழ்நாட்டில், வன்னியர் சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்காக, பல வன்னியர் வள்ளல்களால் உயிலாக எழுதி வைக்கப்பட்ட அறக்கட்டளைகளை அடையாளம் கண்டு, அவைகளை ஒருங்கிணைத்து, அவை உருவாக்கப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்காக, அரசு 2009 ஆம் ஆண்டு வன்னியர் பொதுச் சொத்து நல வாரியத்தை உருவாக்கியது.

வன்னியகுல சத்திரியர் சமுதாயத்தைச் சேர்ந்த நபர்களால் அல்லது நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட அத்தகைய பொறுப்பாட்சிகளின் சொத்துக்களையும், நிலைக்கொடைகளின் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கு, "தமிழ்நாடு வன்னிய குல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணிவருதல்) சட்டம் 2018" என்ற சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டமானது 04.02.2019 அன்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இச்சட்டத்தின் கீழ் "தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் வாரியம்" ஒரு தலைவர் மற்றும் பத்து உறுப்பினர்களுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாரியத்தில் உறுப்பினர் – செயலாளர் ஒருவரும், இரண்டு அரசு சார்பான உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளனர். மேலும், 23 பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இவ்வாரியத்தின் நிர்வாக செலவுகளுக்காக 2020–2021 ஆம் ஆண்டில் ரூ.1கோடி ஒப்பளிக்கப்பட்டது. இவ்வாரியத்தால் இதுவரை 97 அறக்கட்டளைகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றுள் 36 அறக்கட்டளைகள் இவ்வாரியத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்யப்பட்ட இந்த 36 அறக்கட்டளைகளின் சொத்துக்களின் பட்டியலை இச்சட்டப்பிரிவு 5–ன்படி தமிழ்நாடு அரசிதழில் வெளியிடுவதற்கு இவ்வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 9.தமிழ்நாடு சாதிவாரியான அளவிடக்கூடிய முழுமையான புள்ளிவிவர சேகரிப்பு ஆணையம்

தமிழ்நாட்டில் சாதிவாரியான அளவிடக்கூடிய முழுமையான புள்ளிவிவரங்களைச் சேகரிக்கும் பொருட்டு தமிழ்நாடு சாதிவாரியான அளவிடக்கூடிய முழுமையான புள்ளிவிவரங்களைச் சேகரிக்கும் ஆணையம் அமைக்கப்பட்டது.

## 10. சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது

தமிழ்நாட்டில் சமூக நீதிக்காகப் போராடியவர்களை சிறப்பு செய்யும் பொருட்டு ஆண்டுதோறும் அரசு, சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதினை அரசு வழங்கி வருகிறது. இவ்விருது ஒரு சவரன் தங்கப் பதக்கமும், ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிழியும் கொண்டதாகும்.

## 11. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த கிராமப்புற மாணவியருக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்குதல்

கிராமப்புறங்களிலுள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவியர் தங்களது தொடக்கக் கல்வியினை இடையில் நிறுத்தாமல் தொடர்ந்து கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் பொருட்டு 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை ஆண்டுக்கு ரூ.500, 6ஆம் வகுப்பு பயிலும் மாணவியருக்கு ரூ.1000–ம் ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் 1999–2000 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பயன்பெறும் மாணவியர்களின் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.72000 ஆகும்.

கடந்த 5 ஆண்டுகளில் பயனடைந்த மாணவியர் எண்ணிக்கை மற்றும் செலவின விவரம் பின்வருமாறு:–

| ஆண்டு | பயனடைந்தோர் எண்ணிக்கை | செலவினம் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 2016–17 | 225899 | 1361.55 |
| 2017–18 | 249784 | 1528.25 |
| 2018–19 | 246302 | 1588.26 |
| 2019–20 | 256556 | 1584.61 |
| 2020–21 | 264898 | 1655.69 |

## 12. சீருடைகள் வழங்குதல்

விடுதிகளில் தங்கி பயிலும் 10 ஆம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவியருக்கு 4 இணை சீருடைகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன.

| ஆண்டு | பயனடைந்தோர் எண்ணிக்கை | | | செலவினம் (ரூ.இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/சீம | மொத்தம் |
| 2015–16 | 19658 | 19040 | 38698 | 183.86 | 171.90 | 355.76 |
| 2016–17 | 26742 | 22445 | 49187 | 286.48 | 170.10 | 456.58 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2017–18 | 22354 | 20711 | 43065 | 234.05 | 109.46 | 343.51 |
| 2018–19 | 20291 | 17517 | 37808 | 244.98 | 224.73 | 469.71 |
| 2019–20 | 19750 | 18811 | 38561 | 275.50 | 264.40 | 539.90 |

## 13. உணவு மானியம் வழங்குதல்

அரசால் அங்கீகரிக்கப்பட்டு தனியாரால் நிர்வகிக்கப்படும் 39 மாணவர் இல்லங்களில் தங்கி கல்வி பயிலும் பிவ / மிபிவ / சீம மாணவ / மாணவியருக்கு, நிர்ணயிக்கப்பட்ட கட்டண வீதத்தில் உணவு மானியம் வழங்கப்படுகிறது. பெற்றோர்களது ஆண்டு வருமானம் 1 இலட்சத்துக்கு மிகைப்படாத மாணவ, மாணவியருக்கு இம்மானியத் தொகை வழங்கப்படுகின்றது. மாதாந்திர உணவு மானியம் ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் பயனடைந்தோர் மற்றும் செலவின விவரம் பின்வருமாறு :

| ஆண்டு | பயனடைந்தோர் எண்ணிக்கை | | | செலவினம் (ரூ.இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/சீம | மொத்தம் |
| 2016–17 | 639 | 540 | 1179 | 41.58 | 35.15 | 76.73 |
| 2017–18 | 567 | 502 | 1069 | 36.85 | 32.61 | 69.46 |
| 2018–19 | 487 | 442 | 929 | 43.84 | 39.78 | 83.62 |
| 2019–20 | 486 | 466 | 952 | 43.81 | 42.00 | 85.81 |
| 2020–21 | 486 | 466 | 952 | 9.18 | 7.32 | 16.50 |

## 14. விடுதிகள்

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியரின் நலனுக்காக மொத்தம் 1354 விடுதிகள் இயங்கி வருகின்றன. பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 734 விடுதிகளும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்

நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 602 விடுதிகளும் சிறுபான்மையினர் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 18 விடுதிகளும் இயங்கி வருகின்றன. மேற்காணும் 1354 விடுதிகளில் 86514 மாணவ, மாணவியர் தங்கி பயிலுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது

**14 (i)விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட மாணவ/ மாணவியரின் விவரம்**

| துறை | விடுதிகள் | விடுதிகளின் எண்ணிக்கை | | | ஒப்பளிக்கப்பட்ட மாணவ, மாணவியர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| பிவ | கல்லூரி | 82 | 63 | 145 | 7475 | 4960 | 12435 |
| | பள்ளி | 381 | 208 | 589 | 21570 | 11660 | 33230 |
| | **மொத்தம்** | **463** | **271** | **734** | **29045** | **16620** | **45665** |
| மிபிவ | கல்லூரி | 43 | 52 | 95 | 3550 | 4665 | 8215 |
| | பள்ளி | 238 | 113 | 351 | 12800 | 6225 | 19025 |
| | **மொத்தம்** | **281** | **165** | **446** | **16350** | **10890** | **27240** |
| சீம | கல்லூரி | 11 | 8 | 19 | 885 | 640 | 1525 |
| | பள்ளி | 91 | 46 | 137 | 7144 | 3440 | 10584 |
| | **மொத்தம்** | **102** | **54** | **156** | **8029** | **4080** | **12109** |
| சிபா | கல்லூரி | 1 | 13 | 14 | 100 | 1050 | 1150 |
| | பள்ளி | 0 | 4 | 4 | 0 | 350 | 350 |
| | **மொத்தம்** | **1** | **17** | **18** | **100** | **1400** | **1500** |

| விடுதிகள் | விடுதிகளின் எண்ணிக்கை | | | ஒப்பளிக்கப்பட்ட மாணவ, மாணவியர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| கல்லூரி | 137 | 136 | 273 | 12010 | **11315** | 23325 |
| பள்ளி | 710 | 371 | 1081 | 41514 | 21675 | 63189 |
| **மொத்தம்** | **847** | **507** | **1354** | **53524** | **32990** | **86514** |

**14 (ii)விடுதிகளில் மாணவ , மாணவியரைச் சேர்த்தல்**

| | |
|---|---|
| பள்ளி விடுதிகள் | 4 முதல் 12 ஆம் வகுப்பு வரை |
| கல்லூரி விடுதிகள் | ஐ.டி.ஐ, பட்டயம், பட்டம் மற்றும் முதுநிலை படிப்பு |

**14 (iii)உணவுக் கட்டணம்**

பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு உணவுக்கட்டணமாக ரூ. 1000/– வழங்கப்பட்டு வருகிறது. கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு உணவுக்கட்டணமாக ரூ.1100 வழங்கப்பட்டு வருகிறது.

**பண்டிகை கால சிறப்பு உணவுகள்**

பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு பண்டிகை காலங்களில் சிறப்பு உணவு வழங்கப்படுவதற்காக ஒரு பண்டிகைக்கு சிறப்பு உணவுக் கட்டணமாக ரூ.40 ம், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ஒரு பண்டிகைக்கு சிறப்பு உணவுக் கட்டணம் ரூ.80ம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**14 (iv).விடுதி பணியாளர்களுக்கு விருது/பரிசு வழங்கும் திட்டம்**

விடுதிகளை சுகாதாரமான முறையில் பராமரிக்கும் காப்பாளர்கள்/ காப்பாளினிகள் மற்றும் இதர பணியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, மாநில அளவில் 3 சிறந்த விடுதிகளை தேர்ந்தெடுத்து கேடயம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது. மேலும், அவ்விடுதிகளில் பணியாற்றும் காப்பாளர்கள் உள்ளிட்ட பணியாளர்களுக்கு வழங்கப்படும் பரிசுகளின் விவரம் பின்வருமாறு:

**சிறந்த 3 விடுதிகளில் பணியாற்றும் காப்பாளர், காப்பாளினிகள்/ காவலர் மற்றும் ஏவலர் / சமையலர்கள் / தூய்மைப் பணியாளர் ஆகியோருக்கு பரிசுத்தொகைகள் வழங்குதல்**

| வ. எண். | வகை | முதல் பரிசு ரூ. | இரண்டாம் பரிசு ரூ. | மூன்றாம் பரிசு ரூ. |
|---|---|---|---|---|
| 1. | காப்பாளர்/காப்பாளினி | 20,000 | 15,000 | 10,000 |
| 2. | காவலர் மற்றும் ஏவலர் | 10,000 | 5,000 | 3,000 |
| 3. | சமையலர் | 10,000 | 5,000 | 3,000 |
| 4. | தூய்மைப் பணியாளர் | 5,000 | 3,000 | 2,000 |

கடந்த 5 ஆண்டுகளின் செலவின விவரம் பின்வருமாறு.

| ஆண்டு | செலவினம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 2016-17 | 0.10 |
| 2017-18 | 0.10 |
| 2018-19 | 0.10 |
| 2019-20 | 1.37 |
| 2020-21 | 1.37 |

**14 (vi).விடுதிகளின் நிர்வாக செலவினங்களுக்காக கடந்த 5 ஆண்டுகளின் செலவினம்.**

**(ரூ. இலட்சத்தில்)**

| ஆண்டு | பிவ | மிபிவ/சீம | மொத்தம் |
|---|---|---|---|
| 2016-17 | 11493.43 | 9785.33 | 21278.76 |
| 2017-18 | 12921.89 | 10683.60 | 23605.49 |
| 2018-19 | 13675.95 | 11548.17 | 25224.12 |
| 2019-20 | 14844.56 | 12277.53 | 27122.09 |
| 2020-21 | 10859.70 | 8632.40 | 19492.10 |

**14 (vii). ஒன்றிய மற்றும் மாநில அரசின் பங்களிப்புடன் கட்டப்பட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு ஆண்டுவாரியாக செலவின விவரம்**

| ஆண்டு | ஒன்றிய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒன்றிய அரசால் விடுவிப்பு செய்யப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | விடுதிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2012-13 | 276.37 | 276.37 | 5 |
| 2013-14 | 805.00 | 805.00 | 14 |
| 2014-15 | 470.17 | 446.66 | 6 |
| 2015-16 | 456.43 | 228.21 | 5 |
| 2019-20 (ம) 2020 -21 | 2115.00 | 1057.50 | 12 |

ஒன்றிய, மாநில அரசு பங்கீட்டின் கீழ் கட்டப்படும் விடுதிகளுக்கு 2014-15 ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசு அதன் பங்கீடாக மாணவர் விடுதிகளுக்கு 60%-ம், மாணவியர் விடுதிகளுக்கு 90%-மும் மொத்த மதிப்பீட்டு தொகையில் வழங்கி வருகிறது.

## 15. இலவச மிதிவண்டிகள் வழங்குதல்

அரசு, அரசு நிதியுதவி மற்றும் பகுதி நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ, மாணவியருக்கு வருமான உச்சவரம்பின்றி **இலவசமாக** மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள விடுதி , உண்டி உறைவிடப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்கப்படுவதில்லை. 2020-21 ஆம் ஆண்டிற்கு அரசு/ அரசு உதவி பெறும் மற்றும் பகுதி உதவி பெறும் பள்ளிகளில் பிவ, மிபிவ மற்றும் சீம வகுப்பைச் சார்ந்த +1 வகுப்பு பயிலும் 3,77,286 மாணவ/மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளது.

**2013–2014 ஆம் ஆண்டு முதல் 2020–21 ஆம் ஆண்டு வரை இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்த மாணவ.மாணவியர் மற்றும் செலவிடப்பட்ட தொகை விபரம் (ரூபாய் இலட்சத்தில்)**

| ஆண்டு | பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை | | | | | | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை | | | | | | மொத்த மாணவ/மாணவியரின் எண்ணிக்கை | செலவிட்டப்பட்ட மொத்த தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாணவர் எண்ணிக்கை | செலவிடப் பட்ட தொகை | மாணவியர் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை | பயனடைந்த மொத்தமாணவ. மாணவியர் எண்ணிக்கை | செலவிடப்பட்ட மொத்த தொகை | மாணவர் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை | மாணவியர் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை | பயனடைந்த மொத்தமாணவ. மாணவியர் எண்ணிக்கை | செலவிடப்பட்ட மொத்த தொகை | | |
| 2013–14 | 108314 | 3699.35 | 143561 | 4797.18 | 251875 | 8496.53 | 89742 | 3119.61 | 108747 | 3752.91 | 198489 | 6872.52 | 450364 | 15369.05 |
| 2014–15 | 101267 | 3671.36 | 133652 | 4718.67 | 234919 | 8390.03 | 85388 | 2979.66 | 103539 | 3512.55 | 188927 | 6492.21 | 423846 | 14882.24 |
| 2015–16 | 107735 | 3990.81 | 139396 | 5167.37 | 247131 | 9158.18 | 96435 | 3431.16 | 111005 | 4049.19 | 207440 | 7480.35 | 455471 | 16638.59 |
| 2016–17 | 100480 | 4114.36 | 129964 | 5204.69 | 230444 | 9319.05 | 92668 | 3560.20 | 117757 | 4436.23 | 210425 | 7996.43 | 440869 | 17315.48 |
| 2017–18 & 2018–19 | 165889 | 5923.52 | 229311 | 7966.95 | 395200 | 13890.47 | 150844 | 5679.67 | 193592 | 7113.20 | 344436 | 12792.87 | 739636 | 26683.34 |
| 2019–20 | 80947 | 3272.68 | 109351 | 4222.04 | 190298 | 7494.72 | 75988 | 3072.19 | 96207 | 3714.55 | 172195 | 6786.74 | 362493 | 14281.48 |
| 2020–21 | 85178 | 3443.74 | 113028 | 4374.98 | 198206 | 7818.72 | 80512 | 3255.10 | 98568 | 3805.71 | 179080 | 7060.81 | 377286 | 14879.34 |

## 16. இலவச  தையல் இயந்திரம் வழங்குதல்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள மக்கள் சுய தொழில் செய்து பொருளாதார நிலையை மேம்படுத்திட இலவசமாக மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பயனாளிகளின் குடும்ப ஆண்டு வருமானம்ரூ.72,000/–

கடந்த 5 ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தோர் மற்றும் செலவின விவரம் :

| ஆண்டு | தையல் இயந்திரங்களின் எண்ணிக்கை | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2016–17 | 2467 | 82.76 |
| 2017–18 | 2785 | 99.50 |
| 2018–19 | 3000 | 131.38 |
| 2019–20 | 3000 | 135.00 |
| 2020–21* | 3000 | 135.00 |

* 2020–21 ஆம் நிதியாண்டில் மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்களை பயனாளிகளுக்கு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 17. இலவச  சலவைப் பெட்டி வழங்குதல்

சலவை தொழில் புரியும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மக்கள் சுய தொழில் செய்து பொருளாதார நிலையை மேம்படுத்திட இலவசமாக சலவை பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பயனாளிகளின் குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.72,000/– ஆகும்.

கடந்த 5 ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தோர் மற்றும் செலவின விவரம்

| ஆண்டு | சலவைப் பெட்டிகளின் எண்ணிக்கை | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2016–17 | 1827 | 84.96 |
| 2017–18 | 2092 | 104.97 |
| 2018–19 | 1965 | 104.97 |
| 2019–20 | 2238 | 109.00 |
| 2020–21* | 2238 | 109.00 |

* 2020–21 ஆம் நிதியாண்டின் 2238 சலவைப்பெட்டிகள் பயனாளிகளுக்கு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 18. இலவச வீட்டு மனைப்பட்டா வழங்குதல்

வீடுகளற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு இலவசமாக வீட்டு மனைகள் வழங்கப்படுகின்றன. பயனாளிகளின் குடும்ப ஆண்டு வருமானம்ரூ.72,000/– ஆகும்

கடந்த 5 ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தோர் மற்றும் செலவின விவரம் :

| ஆண்டு | பயனடைந்தோர் எண்ணிக்கை | செலவினம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2016–17 | 843 | 218.77 |
| 2017–18 | 278 | 63.87 |
| 2018–19 | 474 | 220.75 |
| 2019–20 | 300 | 123.55 |
| 2020–21 | 548 | 344.43 |

## 19. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தவரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக தொழில் துவங்க குறைந்த வட்டியில் கடன் உதவி வழங்கிவருகிறது. 1982 ஆம் ஆண்டு இந்நிறுவனம் அமைக்கப்பட்டது.

1993–94ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம், தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் முகவராக பணியாற்றி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு கடன்திட்டங்களின் கீழ் கடன் தொகை வழங்க தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் நிதி உதவி செய்து வருகிறது.

1993–94 ஆம் ஆண்டு முதல் இதுவரை (31/03/2021) இக்கழகத்திற்கு, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம், **ரூ.88936.27** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து தந்துள்ளது. இதுவரை **488586** பயனாளிகளுக்கு **ரூ.97974.31** இலட்சம் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பங்களிப்புடன் வழங்கப்பட்டுள்ளது.

**கடன் திட்டங்கள்**

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் தனி நபர்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கி வருகிறது. கடன் திட்டங்களுக்கான பயனாளிகளை, அந்தந்த மாவட்ட கூட்டுறவு சங்கங்களுக்கான இணைப்பதிவாளர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், மாவட்ட தொழிற்மையத்தின் பொது மேலாளர் மற்றும் அந்தந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் ஆகியோரைக் கொண்ட குழு தெரிவு செய்கிறது. கடன் திட்டங்களுக்கான அனுமதி மற்றும் நிதி, கூட்டுறவு வங்கிகள் / கூட்டுறவு சங்கங்கள் மூலம் விடுவிக்கப்படுகிறது.

தாய்கோ வங்கி, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகம், கூட்டுறவு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையங்கள் (ஆவின்) ஆகிய நிறுவனங்கள் கடன் தொகைகளை வழங்குவதற்கும், வசூல் செய்வதற்கும் துணை முகவர்களாக செயல்படுகின்றன.

| 2016–17 முதல் 2020–21 வரை வரையிலான கடன் திட்ட விவரங்கள் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | திட்டத்தின் பெயர் | (ரூபாய் இலட்சத்தில்) | | | | | | | | | |
| | | 2016–17 | | 2017–18 | | 2018–19 | | 2019–20 | | 2020–21 | |
| | | பயனாளி கள் | தொகை | பயனாளி கள் | தொகை | பயனாளிகள் | தொகை | பயனாளிகள் | தொகை | பயனாளிகள் | தொகை |
| 1 | பொதுக் கடன் திட்டம் | 994 | 900.18 | 709 | 392.32 | 479 | 642.34 | 882 | 567.19 | 363 | 381.22 |
| 2 | சிறு வணிகக் கடன் திட்டம் | 23517 | 9494.29 | 16641 | 7483.55 | 14121 | 7081.43 | 17828 | 9586.16 | 13683 | 8857.26 |
| 3 | புதிய பொற் காலத் திட்டம் | 481 | 210.32 | 118 | 48.38 | 308 | 146.90 | 239 | 134.58 | 279 | 163.18 |
| | **மொத்தம்** | **24992** | **10604.79** | **17468** | **7924.25** | **14908** | **7870.67** | **18949** | **10287.93** | **14325** | **9401.66** |

**சிறு, குறு விவசாயிகளுக்கான மானியம் மற்றும் கடன் திட்டம்.**

பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகள் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு உயர் அளவாக ரூ.1,00,000/− வரை 50 விழுக்காடு மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சம் ரூ.50,000/− அரசு மானியமாக வழங்கப்படுகிறது. இதுவரை 5117 சிறு, குறு விவசாயிகளுக்கு மானியமாக ரூ.2409.37 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

## 20 . சிறுபான்மையினர் நல இயக்ககம்

தமிழகத்தில் உள்ள சிறுபான்மையின மக்களின் உரிமைகளைக் காப்பதற்காகவும், அவர்தம் கல்வி மற்றும் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் விதத்திலும் பல்வேறு நலத்திட்டங்களை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது.

**தனி இட ஒதுக்கீடு**

தனி இட ஒதுக்கீடு வழங்கக்கோரி சிறுபான்மையின சமுதாயத்தினரிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு மனுக்களின் மீது தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரையினை பெற்று பரிசிலித்த அரசு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டு வந்த 30 விழுக்காடு இடஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தினை நிறைவேற்றியது. இச்சட்டம் 15.09.2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் அரசுப் பணிகளில் நேரடி நியமனங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு முன்கொணர்வு முறையினை (Carry forward procedure) பின்பற்றிட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது.

**கல்வி உதவித்தொகை**

அரசு, அரசு உதவிபெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஒன்றாம் வகுப்பு முதல் தொழிற்கல்வி/ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் இஸ்லாமியர், கிறித்தவர், சீக்கியர், புத்தமதத்தினர், பார்சி மற்றும் ஜெயின் மதங்களைச் சார்ந்த சிறுபான்மையின மாணவ / மாணவியர் பயனடையும் வகையில் ஒன்றிய அரசின் கீழ்கண்ட கல்வி உதவித் தொகை திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

1. பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டம்
2. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டம்
3. தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை திட்டம்

இக்கல்வி உதவி திட்டங்களால் ஒன்றாம் வகுப்பு முதல் தொழிற்கல்வி/ ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ / மாணவியர் பயன் பெறுகின்றனர். இதற்கான நிதியை 100 விழுக்காடு ஒன்றிய அரசு வழங்குகிறது. மொத்த ஒதுக்கீட்டில் 30 விழுக்காடு மாணவியர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்படும். மாணவ / மாணவியர் (www.scholarships.gov.in) என்ற இணையதளம் மூலம் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க வேண்டும். மேற்படி திட்டங்களின் கீழ் கல்வி உதவித் தொகை நேரடி பயன்மாற்று முறையில் (DBT– Direct Benefit Transfer) மூலம் மாணவ, மாணவியரின் வங்கி கணக்கில் நேரிடையாக செலுத்தப்படுகிறது.

கல்வி உதவித்தொகைகளின் விவரம் பின்வருமாறு.

| **கல்வி உதவித்தொகை விவரம்** | **பயிலும் வகுப்புகள்** | **பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.** | **கல்வி உதவித்தொகை பெறுவதற்கான தகுதிகள்** |
|---|---|---|---|
| **பள்ளி படிப்பு** | 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு | 1 இலட்சம் | முந்தைய ஆண்டின் இறுதி தேர்வில் (ஒன்றாம் வகுப்பு நீங்கலாக) 50 விழுக்காட்டிற்கு குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும் |
| **பள்ளி மேற்படிப்பு** | 11 ஆம் வகுப்பு முதல் ஆராய்ச்சிப் படிப்பு வரை | 2 இலட்சம் | |
| **தகுதி மற்றும் வருவாய் அடிப்படை** | தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி | 2.50 இலட்சம் | |

கல்வி உதவித் தொகை திட்டங்களின் கீழ் சிறுபான்மையினருக்கு கல்வி உதவித் தொகைகள் வழங்கப்பட்ட விவரம்.

**i. பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை**

| ஆண்டு | மாணவ/ மாணவியர் எண்ணிக்கை | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2016–17 | 301949 | 5643.36 |
| 2017–18 | 353184 | 6927.42 |
| 2018–19 | 324556 | 6674.51 |
| 2019–20 | 376418 | 7822.96 |
| 2020–21 | 381333 | 7645.72 |

**ii. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை**

| ஆண்டு | மாணவ,/மாணவியர் எண்ணிக்கை | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2016–17 | 37779 | 2091.23 |
| 2017–18 | 39193 | 2179.23 |
| 2018–19 | 34667 | 2051.88 |
| 2019–20 | 43233 | 2592.25 |
| 2020–21 | 44294 | 2477.32 |

**iii. தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம்**

| ஆண்டு | மாணவ/மாணவியர் எண்ணிக்கை | ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2016–17 | 4556 | 1139.12 |
| 2017–18 | 6105 | 1572.19 |
| 2018–19 | 4338 | 1139.94 |
| 2019–20 | 5675 | 1469.21 |
| 2020–21 | 5279 | 1342.39 |

**சிறுபான்மையினர் விடுதிகள்**

தமிழ்நாட்டில் சிறுபான்மையின மாணவ / மாணவியர் தங்களது கல்வியினை எவ்வித இடையூறுமின்றி தொடர்ந்து கல்வி பயில ஏதுவாக எவ்வித கட்டணமுமின்றி உணவு மற்றும் உறைவிட வசதிகளுடன் இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 18 சிறுபான்மையினர் விடுதிகள் இயங்கி வருகின்றன.

| **விடுதிகள்** | **விடுதிகளின் எண்ணிக்கை** | | | **ஒப்பளிக்கப்பட்ட மாணவ / மாணவியர் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| | **மாணவர்** | **மாணவியர்** | **மொத்தம்** | |
| பள்ளி விடுதிகள் | 0 | 4 | 4 | 350 |
| பள்ளி / கல்லூரி விடுதிகள் | 0 | 5 | 5 | 250 |
| கல்லூரி விடுதிகள் | 1 | 7 | 8 | 800 |
| பொறியியல் கல்லூரி விடுதிகள் | 0 | 1 | 1 | 100 |
| **மொத்தம்** | **1** | **17** | **18** | **1500** |

**விடுதிகளின் நிர்வாகத்திற்கென ஆண்டுவாரியான ஒதுக்கீடு மற்றும் செலவிடப்பட்ட தொகை விவரங்கள் பின்வருமாறு.**

| **ஆண்டு** | **ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்)** | **செலவிடப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|
| 2016-17 | 324.96 | 194.69 |
| 2017-18 | 347.55 | 324.54 |
| 2018-19 | 383.13 | 362.65 |
| 2019-20 | 351.74 | 322.54 |
| 2020-21 | 404.42 | 189.69 |

**முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்**

இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள ஆதரவற்ற கணவரால் கைவிடப்பட்ட / விதவை மற்றும் வயதான பெண்களுக்கு உதவிடும் வகையில் அனைத்து மாவட்ட தலைநகரங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரை பதவி வழி தலைவராக கொண்டு மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் 2007 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டு சங்கங்களின் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இணை மானியம் இரு மடங்காக உயர்த்தப்பட்டு 1:2 என்ற விகிதாச்சாரத்தில் ஒரு வருடத்திற்கு ஒரு சங்கத்திற்கு அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் நன்கொடை மற்றும் இணைமானியம் ஆகியவற்றின் மூலம் ஆதரவற்ற, வயதான முஸ்லிம் விதவைகள் மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் முஸ்லிம் மகளிர் ஆகியோர்களுக்கு உதவிடும் வகையில் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தவிர தையல் பூ–வேலைப்பாடுகள், காலணிகள், கைவினை பொருட்கள் செய்வதற்கான பயிற்சிகள் மற்றும் தேவைக்கேற்ப இதர பயிற்சிகளும் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் அரசால் ஒப்பளிக்கப்பட்ட இணை மானியத் தொகை வழங்கப்பட்ட விவரம்.

| ஆண்டு | இணை மானியம் விடுவிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) | சென்னை மாவட்டத்திற்குஇணை மானியம் விடுவிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2016–17 | 141.18 | 11.59 |
| 2017–18 | 104.05 | 11.84 |
| 2018–19 | 126.78 | 13.32 |
| 2019–20 | 54.50 | 13.33 |
| 2020–21 | 566.16 | 20.00 |

**கிறித்துவ மகளிர் உதவும் சங்கம்**

தமிழ்நாட்டிலுள்ள கிறித்துவ மதத்தைச் சார்ந்த ஆதரவற்ற, கணவரால் கைவிடப்பட்ட மற்றும் வயதான கிறித்துவ மகளிர் நலனுக்காக மாவட்ட ஆட்சியர் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் ஏற்படுத்தப்பட்டு சங்கங்களின் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சங்கங்களுக்கு விதைத் தொகையாக ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூ.1.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இச்சங்கங்கள் நன்கொடை மூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப 1:2 என்ற விகிதாச்சாரத்தில் ரூ.20 இலட்சம் வரை இணை மானியம் வழங்கப்படும்.

2020–2021 ஆம் ஆண்டில் அரசின் இணைமான்யமாக ரூ.330.71 இலட்சம் மேற்படி வழங்கப்பட்டுள்ளது.

**உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்**

தமிழ்நாட்டில் உள்ள இஸ்லாமியர்களின் பள்ளிவாசல்கள், தர்காக்கள், அடக்கஸ்தலங்கள், தைக்காக்கள், ஆஷூர்கானாக்கள், முஸ்லிம் அனாதை இல்லங்கள் மற்றும் மதரஸாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள் / ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் உள்ளிட்ட பணியாளர்களின் பொருளாதாரம் மற்றும் கல்வி நிலைகளின் மேம்பாட்டிற்காக உலமாக்கள் மற்றும் இதரப் பணியாளர்கள் நலவாரியம் 2009–ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு (அரசாணை (நிலை) எண்.74, பிவ, மிபிவ (ம) சிபா நலத்துறை, நாள்.24.8.2009) செயல்பட்டு வருகிறது.

இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய 18 வயது நிறைவு செய்தும் 60 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். பதிவு பெற்ற உறுப்பினருக்கு ஓர் அடையாள அட்டை கட்டணமின்றி இவ்வாரியத்தால் வழங்கப்பட்டு வருகிறது. அடையாள அட்டை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும்.

இவ்வாரியத்தில் இதுவரையில் 14842 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இதுவரை 3852 உறுப்பினர்கள் மற்றும் அவரது குடும்பத்தினர் பயனடைந்த வகையில் ரூ.141.59 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாரியத்தில் இதுவரை நலத்திட்டம் வாரியாக வழங்கப்பட்ட நிதியுதவி விவரம் பின்வருமாறு.

| திட்டம் | பயனாளிகள் | தொகை (ரூ.) |
|---|---|---|
| கல்வி உதவித்தொகை | 1465 | 2153150 |
| திருமணம் | 334 | 666750 |
| மகப்பேறு | 264 | 1579000 |
| கருச்சிதைவு/ கருக்கலைப்பு | 21 | 70000 |
| விபத்தினால் ஏற்படும் மரணம் | 7 | 610000 |
| இயற்கை மரணம் | 145 | 2195000 |
| இறுதிச்சடங்கு | 150 | 306000 |
| கண் கண்ணாடி | 1162 | 581000 |
| ஓய்வூதியம் | 304 | 5998450 |
| **மொத்தம்** | **3852** | **14159350** |

**பதிவு பெற்ற வஃக்பு நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு இருசக்கர வாகனம் வாங்க மானியம்:**

வஃக்பு வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட 2,814 வஃக்பு நிறுவனங்கள் தற்போது தமிழ் நாட்டில் உள்ளன. இந்த பதிவு செய்யப்பட்ட வஃக்பு நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு புதிய இருசக்கர வாகனம் வாங்க மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது ரூ.25000 இதில் எது குறைவோ, அத்தொகை மானியமாக வழங்கிட உத்திரவிடப்பட்டுள்ளது.

**ஜெருசலேம் புனிதப் பயணத்திற்கான நிதியுதவி**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிறித்துவ பிரிவினரும் இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு புனித பயணம் செல்வதற்கு நிதியுதவி வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது ஒரு பயனாளிக்கு நிதி உதவியாக ரூ.37,000 நிதி வழங்கப்பட்டுகிறது. ஆண்டொன்றுக்கு இத்திட்டத்தின் கீழான பயனாளிகளின் எண்ணிக்கை 600 ஆகும். இதில் 50 கன்னியாஸ்திரிகள்/ அருட்சகோதரிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கடந்த 5 ஆண்டுகளில் பயணம் மேற்கொண்டவர்கள் விவரம் பின்வருமாறு:

| ஆண்டு | பயணம் மேற்கொண்டவர்கள் | செலவினம் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 2016–17 | 460 | 92.00 |
| 2017–18 | 500 | 100.00 |
| 2018–19 | 570 | 114.00 |
| 2019–20 | 258 | 51.60 |
| * 2020–21 | – | – |

* 2020–21 ஆம் ஆண்டு ஜெருசலேமிற்கு புனித பயணம் மேற்கொள்ளும் திட்டம் கொரானா நோய் தொற்றின் காரணமாக நடைமுறைப்படுத்தவில்லை.

இத்திட்டத்தின் கீழ் இதுவரையில் 4128 கிறித்துவர்கள் ரூ.825.60 இலட்சம் நிதி உதவி பெற்று புனிதப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

**கிறித்துவ தேவாலயங்கள் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிக்கான மானிய உதவி அளிக்கும் திட்டம்.**

தமிழகத்தில் உள்ள கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கு மானிய உதவி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கென இதுவரை ரூ.700.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 15 மாவட்டங்களில் உள்ள 23 கிறித்துவ

தேவாலயங்களுக்கு புனரமைப்புப் பணிகளுக்காக ரூ.59.40 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் தேவாலயம் பதிவு செய்யப்பட்டு சொந்தக்கட்டடத்தில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகளுக்கு மேல் பயன்பாட்டில் இருக்க வேண்டும். தேவாலயத்தின் பழுதுகளை மாவட்ட ஆட்சித்தலைவரால் அமைக்கப்பட்ட குழுவினரால் ஸ்தல ஆய்வுக்குப்பின் அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடம், கட்டடத்தின் ஸ்திரத்தன்மை, பழுதுகள் மதிப்பீடு செய்து திட்டமதிப்பீடு மற்றும் கட்டடத்தின் வயது ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவரால் நிதி உதவி கோரி துறைத்தலைவருக்கு பரிந்துரை செய்யப்பட வேண்டும்.

2020–2021 ஆம் ஆண்டில், கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுதுநீக்குதலுக்காக ரூ.14.78 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | மாவட்டம் | தேவாலயம் பெயர் | ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | மதுரை | தென்னிந்திய திருச்சபை தேவாலயம், டி.கல்லுபட்டி கிராமம் | 3.00 |
| 2. | திண்டுக்கல் | ஆர்.சி தேவாலயம், அய்யம்பாளையம் ஆத்தூர் வட்டம் | 3.00 |
| 3. | திண்டுக்கல் | T.E.L.C தேவாலயம், கொடைக்கானல் வட்டம் | 3.00 |
| 4. | புதுக்கோட்டை | பாத்திமா தேவாலயம், ஆலங்குடி, கே.வி. கோட்டை | 3.00 |
| 5. | புதுக்கோட்டை | புனித அந்தோணியார் தேவாலயம், குளத்தூர் , மேலப்புதுவயல் | 2.78 |
| **மொத்தம்** | | | **14.78** |

இத்திட்டத்தில் இதுவரை நிதியுதவி வழங்கப்பட்ட விவரம் பின்வருமாறு:

| ஆண்டு | தேவாலயங்களின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|
| 2017-18 | 9 | 21.70 |
| 2018-19 | 7 | 17.92 |
| 2019-20 | 2 | 5.00 |
| 2020-21 | 5 | 14.78 |
| மொத்தம் | 23 | 59.40 |

**9. கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்கல் அமைத்தல்**

இஸ்லாமியர்கள் மற்றும் கிறித்தவர்கள் கோரிக்கையின் அடிப்படையில், கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்கல் அமைக்க நிலம் கையகப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு 2020-21 ஆம் ஆண்டில் ரூ.100 இலட்சம் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**10.பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம்**

சிறுபான்மையின மக்களின் கல்வி வாய்ப்பினை அதிகரிக்கவும், பொருளாதார மற்றும் வேலைவாய்ப்புகளில் சம பங்கினை உறுதி செய்யவும், சிறுபான்மையினர் வாழ்வு நிலையை மேம்படுத்தவும், இனக்கலவரம் மற்றும் வன்முறைகளை தடுத்தல் கட்டுப்படுத்துதல் போன்ற சீரிய குறிக்கோளுக்காகவும் பாரதப் பிரதமரின் புதிய 15 அம்சத்திட்டம் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் முறையாக செயலாக்கப்படுவதைக் கண்காணிக்க மாநில அளவில் தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழுவும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பாரதப்பிரதமரின் புதிய 15 அம்சத்திட்டத்தின் கீழான திட்டவாரியான முன்னேற்ற அறிக்கைகள் பின்வருமாறு.

**i. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் சேவைகளை சீராக கிடைக்கச் செய்தல் (சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை)**

தமிழ்நாட்டில் சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் மொத்தம் 54439 அங்கன்வாடி மையங்கள் (49499 அங்கன்வாடி மையங்கள் மற்றும் 4940 குறு அங்கன்வாடி மையங்கள்) இயங்கி வருகின்றன. இதன் மூலம் மொத்தம் 3395085 குழந்தைகள் பயன் அடைந்துள்ளனர். இவற்றில் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த 264446 குழந்தைகள் அடங்குவர். 2020-21 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.224109.93 இலட்சம் செலவினத்தில் சிறுபான்மையினருக்கென ரூ.17456.11 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**ii. பள்ளிக்கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பை அதிகரித்தல் (பள்ளிக் கல்வித்துறை)**

தமிழகத்தில் கல்வித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும் பள்ளிகளில் எவ்வித தடையுமின்றி சிறுபான்மையின மாணவ/மாணவியர் சேர்க்கப்படுகின்றனர். மேலும் மதவாரியான மற்றும் மொழிவாரியான சிறுபான்மையின குழந்தைகள் அதிகம் வசிக்கும் பகுதியில் போதுமான எண்ணிக்கையில் பள்ளிகள் உள்ளன.

அனைவருக்கும் கல்வித் திட்டம் (SSA) மற்றும் கஸ்துர்ரிபாய் காந்தி பாலிகா வித்யாலயா பள்ளி (KGBVS) திட்டங்களின் கீழ் 2020-2021 -ன்கீழ் மேற்கொள்ளப்பட்ட சாதனை விவரம் பின்வருமாறு.

**(ரூ.இலட்சத்தில்)**

| திட்டத்தின் பெயர் | இருப்பிலுள்ள நிதி | செலவினம் | விழுக்காடு (%) | குறிப்பு |
|---|---|---|---|---|
| **SSA** | 217656.12 | 217092.86 | 99.74 | இச்செலவினத்தில் சிறுபான்மையினரும் அடங்குவர் |
| **KGBV** | 2980.27 | 2978.45 | 99.74 | |

**iii. உருதுமொழியை கற்பிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்துதல் (பள்ளிக் கல்வித்துறை)**

பள்ளி கல்வித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் மாநிலத்தில் உருது மொழியை முதல் பாடமாகக் கொண்டு தொடக்க /இடைநிலை/ உயர்நிலை/மேல்நிலை பள்ளிகள் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் உருதுமொழி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு மாணவ, மாணவியர் உருதுமொழியை முதல் பாடமாகக் கொண்டு பயின்று வருகின்றனர்.

**iv.மதரஸா கல்வி முறையை நவீனப்படுத்துதல் (பள்ளிக் கல்வித்துறை)**

மதரஸா கல்வி முறையை நவீனமயமாக்கும் திட்டமானது, சிறுபான்மை நிறுவனங்கள் / பள்ளிகளின் உள்கட்டமைப்பு மேம்பாடு திட்டம் என ஒரு தனித்திட்டமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின்படி, சிறுபான்மை நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கருத்துருக்கள் பள்ளிக் கல்வித் துறை செயலர் அவர்களின் தலைமையிலான மாநில அளவிலான மானியக்குழுவில் வைக்கப்பட்டு, அவை குழுவின் மூலம் பரிசீலிக்கப்பட்டு முன்னுரிமையின் அடிப்படையில் நிதி ஒப்புதலுக்காக ஒன்றிய அரசிற்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

**v. சிறுபான்மையின சமுதாயத்தைச் சார்ந்த கல்வியில் சிறந்த மாணவ/ மாணவியருக்கு உதவித்தொகை வழங்குதல்.**

அரசு/அரசு உதவி பெறும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கல்வி நிலையங்களில் 1–ஆம் வகுப்பு முதல் தொழிற் கல்வி/ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின வகுப்பைச் சார்ந்த மாணவ/மாணவியருக்கு ஒன்றிய அரசு மூன்று வகையாக கல்வி உதவித்தொகை திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

**v (i). பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை**

இத்திட்டத்தின் கீழ் 2020–21 ஆம் ஆண்டில் 1ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் 381333 சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு ரூ.7645.72 இலட்சம் செலவில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

**v (ii). பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை**

இத்திட்டத்தின் கீழ் 2020–2021 ஆம் ஆண்டில் பதினோராம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரை (ஐ.டி.ஐ, ஐ.டி.சி, தேசிய தொழில் நெறிப் பயிற்சி குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிகள் (NCVT) பாலிடெக்னிக், ஆசிரியர் பயிற்சி, செவிலியர் பட்டயப்பயிற்சி, இளங்கலை பட்டப்படிப்புகள், எம்.பில் உட்பட) பயிலும் 44294 சிறுபான்மையின மாணவ/மாணவியருக்கு ரூ.2477.32 இலட்சம் செலவில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

**V(iii) தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை**

இத்திட்டத்தின் கீழ் 2020–21 ஆம் ஆண்டில் தொழிற்கல்வி/ தொழில் நுட்பக்கல்வி பயிலும் 5279 சிறுபான்ய்யின மாணவ, மாணவியருக்கு ரூ.1342.39 இலட்சம் செலவில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

**vi. மௌலானா ஆசாத் கல்வி அமைப்பின் மூலம் கல்விக்கூடங்களின் கட்டமைப்புகளை மேம்படுத்துவது (கல்வித்துறை)**

இந்நிறுவனத்தின் மூலம் கல்வியில் சிறந்து விளங்கும் சிறுபான்மையினத்தைச் சார்ந்த 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் 33964 மாணவியருக்கு கல்வி உதவித்தொகை ரூ.30.22 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**vii.சுய வேலைவாய்ப்பு மற்றும் எளியவர்களுக்கான கூலியுடன் வேலைத்திட்டம்**

**அ. தீன் தயாள் அந்தியோதய யோஜனா – தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் (DAY – NRLM)**

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)**

ஊரக ஏழை மக்களுக்காக வலுவான மற்றும் துடிப்பான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, வாழ்வாதாரத்தை உயர்த்தி, நிதி மற்றும் பல்வேறு சேவைகளை முறையாகப் பெற வழிவகை செய்து, குடும்ப வருமானத்தை பெருக்குவதே தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமாகும். இத்திட்டம் சமுதாயத்தில் உள்ள ஏழைகள் மற்றும் நலிவுற்ற பிரிவினர்களை இலக்காக கொண்டுள்ளது. இலக்கு மக்களுக்கு நிலையான வாழ்வாதாரத்தை ஏற்படுத்துவதற்காக அவர்களைக் கொண்டு செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகள் அமைக்கப்படுகிறது. இந்த திட்டத்தின் செயல்பாடுகளுக்கான நிதி, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது.

**i. சுய உதவி குழு உருவாக்குதல்**

2020–2021–ஆம் ஆண்டிற்கு 8000 சுய உதவி குழுக்கள் (புதிது மற்றும் புதுப்பித்தல்) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் 1200 குழுக்கள் சிறுபான்மையினருக்கு உரியதாகும்.

**ii. சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி**

2020–2021–ஆம் ஆண்டில் ஒரு சுய உதவி குழுவிற்கு ரூ.15,000 வீதம் 8000 சுய உதவி குழுக்களில் சிறுபான்மையினருக்கென 1200 என இலக்கு நிர்ணயக்கப்பட்டு அதில் 141 குழுக்களுக்கு ரூ.20.80 இலட்சம் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**iii. சமுதாய முதலீட்டு நிதி**

இத்திட்டத்தின் கீழ், பொருளாதார மேம்பாட்டிற்கான ஒரு சுய உதவி குழுவிற்கு ரூ.75,000 வரை 9 விழுக்காடு வட்டி விகிதத்தில், 15000 சுய உதவி குழுக்களில் சிறுபான்மையினருக்கென 2250 என இலக்கு நிர்ணயக்கப்பட்டு அதில் 215 குழுக்களுக்கு ரூ.1.03 கோடி சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**ஆ. திறன் மேம்பாடு மற்றும் பணியமர்வு திட்டம்**

**i. வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி**

திறன் பயிற்சி திட்டமானது 2012–ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வந்து பின்னர் தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்யா யோஜனா என பெயர் மாற்றப்பட்டு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

மாநிலத்தில் கீழ்க்கண்ட முக்கிய பிரிவுகளில் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆட்டோ மொபைல், சுகாதாரம், தோல் மற்றும் தோல் பொருட்கள், தகவல் தொழில்நுட்பம், சில்லறை வர்த்தகம், ஆயத்த ஆடைகள், வங்கி நிதி சேவை மற்றும் காப்பீடு மற்றும் அழகு கலை, சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், மின் மற்றும் மின்னணு, கட்டுமானம், விவசாய பண்ணை உபகரணங்கள் பராமரிப்பு, வெல்டிங், தொழிற்சாலைகளின் உற்பத்தி சம்பந்தமானவை, தளவாடங்கள் மற்றும் விநியோகத் தொடர் மேலாண்மை, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலியவை.

இப்பயிற்சி திட்டம் 2019-2020 ஆம் ஆண்டு முதல் மூன்று வருடத்திற்கு இத்திட்டத்திற்கான மொத்த பயனாளிகளின் இலக்கு 44000 ஆகும். இதில் சிறுபான்மையினருக்கான இலக்கு 7040. இதற்கான நிதி இலக்கு மற்றும் சிறுபான்மையினருக்கான இலக்கு முறையே ரூ.85.98 கோடி மற்றும் ரூ.9.16 கோடி ஆகும். இத்திட்டத்தின் கீழ் பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

## இ. தீன் தயாள் அந்தியோதய யோஜனா – தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (DAY – NULM)

தீன் தயாள் அந்தியோதய யோஜனா–தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கமானது ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற நிதி விகிதாச்சாரஅடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது நகர்ப்புறங்களில் பின்தங்கிய மற்றும் ஏழை குடும்பங்களுக்கு வலுவான நிறுவன அமைப்புகளை உருவாக்கித்தருவதன் மூலம் அவர்களின் நிலையான வாழ்வாதாரத்தை கீழ்மட்ட நிலையிலிருந்து இலாபம் தரக்கூடிய வகையில் சுய வேலை மற்றும் திறன் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி அவற்றின் மூலம் அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட உறுதி செய்தல்.

2020-21 ஆம் ஆண்டிற்கான திட்டவாரியான சாதனைகள் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | திட்டம் | சிறுபான் மையின ருக்கான இலக்கு | சிறுபான்மையினருக்கான இலக்கின் மீதான சாதனை | | சாதனை சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | | பயனாளிகள் விவரம் | தொகை (ரூ.கோடியில்) | |
| 1 | சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு | 2256 | 1489 | – | 66% |
| 2 | சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குதல் RF to SHGS | 2256 | 345 | 0.54 | 15% |
| 3 | சுய வேலை வாய்ப்புத் திட்டம்– தனிநபர் | 1313 | 1044 | 6.93 | 80% |
| 4 | சுய வேலை வாய்ப்புத் திட்டம்– குழு | 1202 | 435 | 12.64 | 36% |
| 5 | சுய வேலை வாய்ப்புத் திட்டம்– பி.எல் | 3715 | 1049 | 43.38 | 28% |
| 6 | வேலை வாய்ப்புடன் கூடிய திறன் (ம) பணியமர்வு பயிற்சி | 2255 | – | – | |

**viii தொழில் நுட்ப பயிற்சியின் மூலம் திறனை மேம்படுத்துதல்: (தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை)**

இத்திட்டத்தின் கீழ் சிறுபான்மையினருக்கு தங்கள் திறனை வளர்த்து அதன் மூலம் வேலை வாய்ப்பு பெற பயிற்சி அளிக்கப்படுகிறது. சிறுபான்மையினர் அதிகம் இருக்கும் இடத்தில் புதிய தொழிற் பயிற்சி நிலையங்களை துவக்கியும் ஏற்கனவே உள்ள பயிற்சி நிலையங்களின் தரம் உயர்த்தப்படுகிறது.

தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கீழ் 565 தொழிற்பயிற்சி நிலையங்கள் (89 அரசு (ம) 476 தனியார்) இயங்கி வருகின்றன. இவற்றில் 2020–2021 ஆம் ஆண்டில் பயின்ற 32443 மாணவ / மாணவியர்களுள் 2431 மாணவ, மாணவியர் சிறுபான்மையினர் ஆவார்.

**ix. (a) பொருளாதார நடவடிக்கைகளுக்கான கடன் உதவியை அதிகரிக்கச் செய்தல்**

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் சிறுபான்மையின மக்களுக்கு குறைந்த வட்டியில் பொருளாதார கடனுதவிகள் வழங்கப்படுகின்றன. 2020–2021– ஆம் ஆண்டில் மொத்தம் 6910 பயனாளிகளுக்கு ரூ.4185.68 இலட்சம் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

**(b) சிறுபான்மையினருக்கு வங்கிகள் மூலம் கடன் வழங்குதல்**

பொதுத்துறை வங்கிகள் மூலம் வழங்கும் கடன்களில் 15% சிறுபான்மையினருக்கு வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 30.09.2020 உடன் முடிவடைந்த காலாண்டில் 1513665 சிறுபான்மையினருக்கு ரூ.15282 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**x.. மாநில மற்றும் மத்திய அரசுப்பணிகளில் வேலைவாய்ப்பு**

இஸ்லாமியர்களுக்கென அரசு பணிகளில் வேலை வாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களில் சேர்க்கைக்காக 3.5 விழுக்காடு தனி இடஒதுக்கீடு திருத்திய இனச்சுழற்சியின்படி வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**xi. ஊரக வீட்டு வசதி திட்டத்தில் சம அளவு பங்கு (ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை)**

பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின் கீழ் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டி தரப்படுகிறது. மொத்த ஒதுக்கீட்டில் சிறுபான்மையினருக்கு உரிய ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2017–18 ஆம் ஆண்டிற்கு மொத்தம் 130214 வீடுகள் ஆண்டு இலக்காக நிர்ணயிக்கப்பட்டு, அதுவே 2020–2021–ஆம் ஆண்டிற்கு முன்கொணரப்பட்டு அவற்றில் சிறுபான்மையினருக்காக ரூ.7807.20 இலட்சம் செலவில் 6506 வீடுகள் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் டிசம்பர் 2020 வரை மேற்கொள்ளப்பட்டு 1598 வீடுகள் ரூ.2127.23 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை மூலம் தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**xii. சிறுபான்மையினத்தவர் வாழும் குடிசைப்பகுதிகளின் நிலையை மேம்படுத்துதல் (வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை)**

ஒன்றிய அரசின் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 2020–2021–ஆம் ஆண்டிற்கு சிறுபான்மையினருக்கு மொத்தம் ரூ.12000 இலட்சம் செலவில் 2500 வீடுகள் கட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 2516 வீடுகள் ரூ.12048 இலட்சம் செலவில் சிறுபான்மையினர் பயனடையும் வகையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 100% இலக்கு எய்தப்பட்டுள்ளது.

**xiii (ம) xiv. இனக்கலவரங்களைத் தடுத்தல் மற்றும் இனக்கலவரத்தினை தூண்டுவோருக்கு தண்டனை**

இனக்கலவரங்களைத் தடுத்தல் தொடர்பாக மைய அரசின் அறிவுரைப்படி காவல் துறை இயக்குநர் அலுவலகத்தில் தொடர்புப் பிரிவு **(Nodal Cell)**அமைக்கப்பட்டு, அதற்கு காவல் கண்காணிப்பாளர், சிறப்புப் பிரிவு, நுண்ணாய்வுத் துறை, சென்னை–4 அவர்கள் தொடர்பு அலுவலராக **(Nodal Officer)** நியமிக்கப்பட்டுள்ளார். இப்பிரிவு மாநிலத்தில் இனக்கலவரங்கள் நிகழாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்தும் உரிய விவரங்களைச் சேகரித்தும் பராமரித்தும் வருகிறது.

**XV. இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு**

சிறுபான்மை சமூகத்தைச் சார்ந்த இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்கள், சிறு குற்றங்களுக்காக தண்டனை பெற்று சிறையிலிருந்து வெளிவந்தவர்கள், உடல் மற்றும் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோர் சமுதாயத்தில் கண்ணியத்துடன் வாழ்வதற்காக சிறுவணிகம் மேற்கொள்ள மறுவாழ்வு நிதியுதவியாக தலா ரூ. 10 ஆயிரம் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை சிறு குற்றங்களுக்காக சிறை சென்று வெளிவந்த 14 பயனாளிகளுக்கு ரூ.1.40 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**11. பிரதம மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம்**

பிரதம மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம் திட்டம், சிறுபான்மையினர் அதிகம் வாழும் பகுதிகளில் உள்ள சிறுபான்மையினரின் சமூக (ம) பொருளாதார நிலையை உயர்த்துவதையும், அவர்களது வாழ்கை தரத்தை மேம்படுத்தும் வகையில் அடிப்படை வசதிகளை வழங்குவதிலும் மற்றும் ஏற்ற தாழ்வினை குறைப்பதையும் நோக்கமாக கொண்டதாகும். இத்திட்டத்தின் கீழ் கல்வி, சுகாதாரம் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும். ஒன்றிய அரசின் சிறுபான்மையின நல அமைச்சகத்தால், 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி சிறுபான்மையினர் அதிகமாக வாழும் பகுதிகள் என கண்டறியப்பட்டுள்ள பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் சிறுபான்மையினர் அதிகமாக வாழும் பகுதிகள் என சிறுபான்மையினர் நல அமைச்சகத்தால் கண்டறியப்பட்டுள்ள பின்வரும் 4 ஊராட்சிகள் (ம) 18 நகர்ப்புறங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**1.ஊராட்சிகள்**

| வ.எண் | மாவட்டம் | ஊராட்சிகள் |
|---|---|---|
| 1. | இராமநாதபுரம் | திருவாடாணை |
| 2. | இராமநாதபுரம் | மண்டபம் |
| 3. | நீலகிரி | கூடலூர் |
| 4. | புதுக்கோட்டை | மணல்மேல்குடி |

2. நகர்ப்புறங்கள்

| வ.எண் | மாவட்டம் | வ.எண் | நகர்ப்புறங்கள் |
|---|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் | 1. | குறிச்சி |
| | | 2. | குனியமுத்தூர் |
| 2. | திண்டுக்கல் | 3. | திண்டுக்கல் |
| 3. | வேலூர் | 4. | வேலூர் |
| | | 5. | பேரணாம்பட்டு |
| 4. | இராணிப்பேட்டை | 6. | மேல்விஷாரம் |
| 5. | நாகப்பட்டினம் | 7. | நாகப்பட்டினம் |
| 6. | இராமநாதபுரம் | 8. | கீழக்கரை |
| 7. | திருநெல்வேலி | 9. | திருநெல்வேலி |
| 8. | தூத்துக்குடி | 10. | தூத்துக்குடி |
| | | 11. | காயல்பட்டினம் |
| 9. | திருப்பத்தூர் | 12. | ஆம்பூர் |
| | | 13. | வாணியம்பாடி |
| 10. | கரூர் | 14. | பள்ளப்பட்டி |
| 11. | தென்காசி | 15. | தென்காசி |
| | | 16. | கடையநல்லூர் |
| 12. | கன்னியாகுமரி | 17. | கொல்லங்கோடு |
| | | 18. | நாகர்கோயில் |

இத்திட்டம் ஒன்றிய மற்றும் மாநில அரசின் 60:40 என்ற நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் மொத்த நிதியில் 80 விழுக்காடு கல்வி சுகாதாரம் மற்றும் திறன் வளர்ப்பு திட்டங்களுக்கும், அவற்றில் 33–40 விழுக்காடு பெண்கள் / பெண்குழந்தைகளுக்கான கட்டமைப்புகள் / வசதிகள் ஏற்படுத்துவதற்காக செலவிடப்படும்.

இத்திட்டத்தின் கீழ் சமுதாய கூடம் அமைத்தல், உண்டு உறைவிடப்பள்ளி, திறன்மிகு வகுப்பறை ஸ்மார்ட்கிளாஸ், அரசு தொழிற்பயிற்சி நிலையம் / தொழில்நுட்ப கூடங்களில் கூடுதல் வகுப்பறைகள் அமைத்தல், சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல், அரசு பள்ளிகளுக்கு கட்டிடங்கள், பல்வகை தொழிற்நுட்ப கல்லூரிகள், வேலைக்கு செல்லும் பெண்களுக்கு விடுதிகள் அமைத்தல், மத்திய மாநில அரசின் பல்கலைகழகங்களில் மாணவர் விடுதிகள் மற்றும் சிறப்பு வகுப்புகள் உருவாக்குதல், அரசு அங்கிகரித்துள்ள

மதராசா பள்ளிகளுக்கு இணைய வசதியுடன் கூடிய கணினிகள் வழங்குதல் மற்றும் ஒன்றிய அரசின் சிறுபான்மையினர் நல அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை சிறுபான்மையினர் அதிகம் வாழும் இடங்களில் ஏற்படுத்தித்தரப்படுகிறது.

2019-20 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 11 மாவட்டங்களிலுள்ள 61 திட்டங்களுக்கு முதல் கட்ட தவணையாக ஒன்றிய அரசின் பங்களிப்பாக ரூ.1280.63 இலட்சமும், மாநில அரசின் பங்களிப்பாக ரூ.853.75 இலட்சமும் மொத்தம் ரூ.2134.39 இலட்சம் ஒதுக்கீடு வழங்கப்பட்டு பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

## 21. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாட்டில் உள்ள சிறுபான்மையினர் வியாபாரம் மற்றும் தொழில் செய்து தங்களது வருமானத்தைப் பெருக்கி பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய உதவிடும் வகையில் குறைந்த வட்டி வீதத்தில் கடன் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1999 – ஆம் ஆண்டில் அரசால் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் வசிக்கும் சிறுபான்மையினரான இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தவர்கள், பார்சிகள் மற்றும் ஜெயின் ஆகியோர் இக்கழகத்தின் மூலம் பயன்பெறுகின்றனர். இக்கழகம் இந்திய கம்பெனிகள் சட்டம், 1956–ன் கீழ் பதிவு செய்யப்பட்டது. இக்கழகம் செயல்படுத்தும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை, மாநில அரசின் பொறுப்புறுதியின் மீது தேசிய சிறுபான்மையின வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து கடனாகப் பெற்று வழங்குகிறது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.5 கோடியாகும். இதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.2.05 கோடியாகும். இந்நிறுவனம், புதுதில்லியில் உள்ள தேசிய சிறுபான்மையின வளர்ச்சி மற்றும் நிதிக்கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி/கூட்டுறவு நகர வங்கி/ தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் பயனாளிகளுக்கு கடன் வழங்கி வருகிறது.

இக்கழகத்தால் வழங்கப்படும் தனிநபர் காலக் கடன், விராசாத் கடன் (கைவினை கலைஞர் கடன்) மற்றும் சுய உதவி குழுக்களுக்கு வழங்கும் சிறுகடன் ஆகிய கடன்களில் பங்குத் தொகை விவரம் பின்வருமாறு:

தேசிய கழகத்தின் பங்கு – 90 %

டாம்கோவின் பங்கு – 5 %

பயனடைவோரின் பங்கு – 5 %

**தனிநபர் காலக்கடன் திட்டம்.**

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையின மக்கள் சுயமாக தொழில்/வியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு பின்வருமாறு தனிநபர் காலக் கடன்கள் வழங்கப்படுகின்றன:–

| வ. எண் | கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | **கடன் திட்டம் I** ரூ.20 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | 6% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000 நகர்ப்புறங்களுக்கு ரூ.1,20,000 |
| 2 | **கடன் திட்டம் II** ரூ.30 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | ஆண்– 8%<br>பெண்– 6% | கடன் திட்டம்–Iஇன் கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8,00,000 வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) |

இத்திட்டத்தின் கீழ் 2020–2021 ஆம் ஆண்டில் 2,720 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.1,943.12 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**விராசாத் –கைவினை கலைஞர் கடன் திட்டம்**

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையின கைவினை கலைஞர்களுக்கு அவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு விராசாத் கடன் (கைவினை கலைஞர் கடன்) குறைந்த வட்டி விகிதத்தில் மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள்/ கருவிகள்/ இயந்திரங்கள் வாங்குவதற்கு வழங்கப்படுகிறது. இத்திட்டம் குறித்த விவரங்கள் பின்வருமாறு :

| கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|
| விராசாத் கைவினை கலைஞர் கடன் திட்டத்தின் கீழ் ரூ.10 இலட்சம் வரை கடன்கள் வழங்கப் படுகின்றன. | ஆண்– 5%<br>பெண்– 4% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000<br><br>நகர்ப்புறங்களுக்கு ரூ.1,20,000 |

**சுய உதவிக் குழுக்களுக்கான சிறுகடன் திட்டம்**

ஆண்கள் மற்றும் பெண்கள் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் பலகாரக்கடை, காலணி விற்பனை செய்தல், சிற்றுண்டி, ஜவுளி வியாபாரம், ஊறுகாய் மற்றும் அப்பளம் தயாரித்து விற்பனை செய்தல், கூடை பின்னுதல் போன்ற சிறு வியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தினை உயர்த்திட சிறுகடன் வழங்கும் திட்டம் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுய உதவி குழுவில் உறுப்பினகள் அதிகபட்சமாக 20 நபர்களும், குறைந்தபட்சமாக 10 நபர்களும் இருத்தல் வேண்டும். இதில் குறைந்தபட்சம் 60% சிறுபான்மையினரும் 40% பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் / ஆதிதிராவிடர் / பழங்குடியினர் இருக்கலாம். இத்திட்டத்தின்கீழ் பின்வருமாறு கடன் வழங்கப்படுகிறது.

| வ. எண் | கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | **கடன் திட்டம் I** ரூ.1,00,000 வரை (சுய உதவிக்குழு உறுப்பினர் ஒருவருக்கு) | 7% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000 நகர்ப் புறங்களுக்கு ரூ.1,20,000 |
| 2 | **கடன் திட்டம் II** ரூ.1,50,000 வரை (சுய உதவிக்குழு உறுப்பினர் ஒருவருக்கு) | ஆண்– 10% பெண்– 8% | கடன் திட்டம் –I இன் கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8,00,000 வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) |

இத்திட்டத்தின் கீழ், 2020–2021 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்கள் மூலம் 4,184 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.2,235.31 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**கல்விக் கடன்**

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால், அரசு/அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் தொழிற் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு பட்டப்படிப்புகள் பயிலும் சிறுபான்மையின மாணவ / மாணவியருக்கு பின்வருமாறு கல்விக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

| வ. எண் | கல்விக் கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன் றுக்கு) | பெற்றோரது ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | **கடன் திட்டம் I**<br>இந்தியாவில் கல்வி பயில கல்விக் கடன் ஆண்டுதோறும் ரூ.4 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.20 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. மேலும், வெளிநாடுகளில் தொழிற்கல்வி பயில ஆண்டிற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ 30 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. | 3% | கிராமப்புறங்களுக்கு ரூ98,000<br>நகர்ப்புறங்களுக்கு ரூ.1,20,000 |
| 2 | **கடன் திட்டம் – II**<br>இந்தியாவில் கல்வி பயில ஆண்டுதோறும் ரூ4 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.20இலட்சம் வரை வழங்கப்படுகிறது. மேலும், வெளிநாடுகளில் கல்வி பயில்பவர்களுக்கு ஒரு கல்வி ஆண்டிற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.30 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. | மாணவர்களுக்கு 8%<br>மாணவியர்களுக்கு 5% | கடன் திட்டம் I இன் கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8,00,000 வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) |

இத்திட்டத்தின் கீழ் 2020–2021 ஆம் ஆண்டில் 6 மாணவ, மாணவியருக்கு ரூ.7.25 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**திறன் வளர்ப்பு பயிற்சி (Skill Development Training) "Kaushal Se Kushalta"**

திறன் வளர்ப்பு பயிற்சி (Skill Development Training) "Kaushal Se Kushalta" திட்டத்தின்கீழ், சிறுபான்மையின இளைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில் அவர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளிகளது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.6 இலட்சத்துக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். இப்பயிற்சிகளின் மூலம் சிறுபான்மையின இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பு மற்றும் வெளி நிறுவனங்களில் பணிவாய்ப்புகள் பெற வாய்ப்புள்ளது. தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம்/தொடர்புடைய துறை திறன் கவுன்சில்/மாநில திறன் மேம்பாட்டுக் கழகம்/தொழில்நுட்ப கல்வி இயக்ககம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிலையங்கள் மூலமாக குறைந்தபட்சம் 200 மணி நேரம் முதல் 250 மணி நேரம் வரை பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்நிறுவனங்கள் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தால் தேர்வு செய்யப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை ஸ்டிச்சர் கூட்ஸ் மற்றும் கார்மெண்ட்ஸ், பிரி அசெம்பிளி ஆப்பரேட்டர் மற்றும் எம்பிராய்டரி ஆகிய மூன்று வகையான பயிற்சிகளுக்கு ஆயத்த ஆடை பயிற்சி மற்றும் வடிவமைப்பு (ATDC), மத்திய காலணி பயிற்சி நிலையம் (CFTI) ஆகிய இரண்டு பயிற்சி நிலையங்கள் மூலம் மொத்தம் ரூ.30.72 இலட்சம் செலவில் 250 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்க தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தால் ஒப்புதல் அளிக்கப் பெற்று பயிற்சிகள் நடைபெற்றுள்ளன.

**தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட கடன் விவரம்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | பயனாளிகள் | தொகை |
|---|---|---|
| 2016-17 | 6147 | 2584.31 |
| 2017-18 | 6847 | 3465.55 |
| 2018-19 | 7708 | 4019.97 |
| 2019-20 | 7139 | 3685.48 |
| 2020-21 | 6910 | 4185.68 |

**தமிழ்நாடு மொழிவழி சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டால்மெட்கோ)**

மொழி வழி சிறுபான்மையினர் பல்வேறு திட்டங்களில் பயனடையவும், தங்கள் நலனை வளர்த்தெடுத்து சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் அடையவும் ஏதுவாக தமிழ்நாடு மொழிவழி சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டால்மெட்கோ) உருவாக்கப்பட்டது. இதன் பங்கு மூலதனம் ரூ.5 கோடியும், விதைத் தொகை ரூ.10 கோடியும், சம்பளம் மற்றும் இதர நிருவாகச் செலவுகளுக்காக ரூ.109.20 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.16.09 கோடி நிதியினை அனுமதித்து 2020-2021-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

## 22. தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்

தமிழ்நாட்டில் வாழும் மதம் மற்றும் மொழி வாரியான சிறுபான்மையினரின் நலன்களைப் பேணிக் காத்திடவும் அவர்கள் உரிமைகளைப் பாதுகாக்கவும் தமிழ் நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் 1989 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

மாநில சிறுபான்மையினர் ஆணையமானது தமிழ் நாட்டில் சட்ட பூர்வ அதிகாரம் பெற்ற ஆணையமாக தமிழ் நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டம் (Act 21 of 2010) ன்படி 01.08.2010 முதல் இயங்கி வருகிறது.

தமிழ்நாடு அரசு சிறுபான்மையினர் ஆணையத்தை தலைவர், துணைத் தலைவர் மற்றும் எட்டு உறுப்பினர்களைக் கொண்டதாக அரசாணை எண். 39 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள்:28.06.2021 மற்றும் அரசாணை எண்.41, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நாள்:06.07.2021–ன்படி மாற்றியமைக்கப்பட்ட மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் விவரம் பின்வருமாறு:

**ஆணைய உறுப்பினர்கள் விவரம்**

| வ. எண் | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திரு .சா .பீட்டர் அல்போன்ஸ் | தலைவர் |
| 2 | Dr.மஸ்தான். | துணைத்தலைவர் |
| 3 | திரு. துரை.இரவிச்சந்திரன்., இ.ஆ.ப., | உறுப்பினர் செயலர் |
| 4 | திரு . ஏ.பி. தமீம் அன்சாரி. | உறுப்பினர் |
| 5 | திரு.ஹர்பஜன் சிங் சூரி. | உறுப்பினர் |
| 6 | திரு .மன்ஜித் சிங் நாயர். | உறுப்பினர் |
| 7 | திரு.பிரவீன் குமார் தாட்டிய. | உறுப்பினர் |
| 8 | திரு. ப. பியாரிலால்ஜெயின். | உறுப்பினர் |
| 9 | திரு. எல். டான் பாஸ்கோ. | உறுப்பினர் |
| 10 | அருட்சகோதரர் M. இருதயம். | உறுப்பினர் |
| 11 | திரு .பிக்கு மௌரியபுத்தா. | உறுப்பினர் |

**ஆணையத்தின் பணிகள்**

**அ)** சிறுபான்மை இனத்தவரை பாதுகாத்திட இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களில் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் மற்றும் நெறிமுறைகள் எவ்வாறு செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது குறித்து ஆராய்ந்து மறு மதிப்பீடு செய்தல்.

**ஆ)** இது போன்ற நடைமுறையிலுள்ள சட்ட திட்டங்களை செவ்வனே செயல்படுத்தி, நடைமுறைக்கு கொண்டு வரும் பொருட்டு, சம்பந்தப்பட்ட துறைகள் அல்லது அமைப்புகளுக்கு தேவையான பரிந்துரைகளை அனுப்பி வைத்தல்.

**இ)** தமிழ்நாட்டிலுள்ள சிறுபான்மையினரின் நலனுக்கென உள்ள அரசின் கொள்கை மற்றும் திட்டங்கள் ஆகியவற்றின் செயல்பாடு குறித்து ஆய்வு பணி மேற்கொள்ளுதல்.

**ஈ)** சிறுபான்மையினருக்கெதிராக வேறுபாடுகள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு ஆராய்ச்சிகள், ஆய்வுகள் மற்றும் பகுப்பாய்வுகளை மேற்கொண்டு தேவைப்படும் கருத்துகளை அரசுக்கு தெரிவித்தல்.

**உ)** சிறுபான்மையினர் தொடர்பாக அரசு மேற்கொள்ள உத்தேசிக்கும் சட்டம் மற்றும் நல திட்டங்கள் குறித்து உரிய கருத்துகளை தெரிவித்தல்.

**ஊ)** மாநிலத்தில் மத நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துதல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான வழிவகைகளை அரசுக்கு பரிந்துரைத்தல்.

**எ)** வரையறுக்கப்பட்ட கால இடைவெளியில் மாநில அரசுக்கு அறிக்கை அனுப்புதல்.

**மதவழி/மொழிவழி சிறுபான்மையினர்**

தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்ட கிறித்தவர், முஸ்லிம், ஜெயினர், சீக்கியர் மற்றும் புத்தமத்தினர் ஆகியோர் மதவழி சிறுபான்மையினர் எனவும், தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்டு தெலுங்கு, உருது, கன்னடம், மலையாளம், சௌராஷ்ட்ரம் மற்றும் மராத்தி ஆகிய மொழிகளை தாய்மொழியாக கொண்டவர்களை மொழிவழி சிறுபான்மையினர் எனவும் தமிழ்நாடு அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

## 23. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

இந்திராசஹானி வழக்கு என்று அறியப்படுகிற மண்டல் வழக்கில், உச்ச நீதிமன்றம் அளித்த வழிகாட்டுதல்களின் அடிப்படையில் ஒரு நிலையான அமைப்பாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டு, 15.3.1993 அன்று முதல் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசரின் தலைமையில் உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. இந்த ஆணையம் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்படுகிறது.

2. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பணிகள் நீதிமுறை சார்புடைய (quasi–judicial) தன்மை வாய்ந்தது. இவ்வாணையத்தின் செயல் வரம்புகளாவன:–

(i) பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோருதல் தொடர்பான மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாக சேர்க்கப்பட்டிருத்தல் அல்லது சேர்க்கப்படாமல் இருத்தல் குறித்தான முறையீடுகள் ஆகியவற்றைப் பெற்று, ஆய்வு செய்து மற்றும் அதன்மீது பரிந்துரைகளை ஆணையம் வழங்கும்;

(ii) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்யும்;

(iii) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு 16(4) மற்றும் இதர பிற தொடர்புடைய கூறுகளின் அடிப்படையிலும், இப்பொருள் தொடர்பாக உச்சநீதிமன்றம் எடுத்துள்ள பல்வேறு முடிவுகளையொட்டியும் ஆணையத்தின் பரிந்துரைகள் அமைய வேண்டும்;

(iV) கிறித்துவர், இசுலாமியர் மற்றும் பிற சிறுபான்மையினர் ஆகியோரில் அவர்களின் சமூக மற்றும் கல்வி ரீதியிலான பிற்படுத்தப்பட்ட நிலையின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட இடஒதுக்கீடு வழங்குதல் குறித்து ஆணையம் பரிந்துரை வழங்கும்;

(V) மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடஒதுக்கீட்டிலிருந்து, உள்ஒதுக்கீடு கோரி பல்வேறு சமுதாயங்கள் வைத்துள்ள முறையீடுகளை ஆராய்ந்து ஆணையம் பரிந்துரை வழங்கும்.

(Vi) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருள்கள் பிறவற்றையும் ஆய்வு செய்து பரிந்துரை வழங்கும்.

இவ்வாணையம் நீதியரசர் திரு எம். தணிகாசலம் (ஓய்வு) அவர்களின் தலைமையில் 6 உறுப்பினர்களுடன் 08.07.2020 அன்று 3 ஆண்டுகளுக்கு திருத்தியமைக்கப்பட்டது.

## 24. தமிழ்நாடு வக்ஃப் வாரியம்

வக்ஃப் சட்டம், 1954 தமிழ்நாட்டில் 15.01.1955–இல் அமல்படுத்தப்பட்டது. தமிழ்நாடு வக்ஃப் வாரியம் 18.01.1958–இல் அமைக்கப்பட்டது. 1995–ஆம் ஆண்டு வக்ஃப் சட்டம் (மத்திய அரசு சட்டம் 43/1995) 01.01.1996 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இவ்வாரியம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படுகிறது. தமிழ்நாடு வக்ஃப் வாரியம் சென்னையை தலைமையிடமாக கொண்டு தமிழகம் முழுவதும் 11 சரக அலுவலகங்களுடன் இயங்கி வருகிறது. 12 உறுப்பினர்களை கொண்டு தமிழ்நாடு வக்ஃப் வாரியம் திருத்தியமைக்கப்பட்டு 19.09.2020 முதல் செயல்பட்டு வருகிறது. வாரியத்திற்கு புதிய உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டு, வாரியத்தின் தலைவராக திரு M. அப்துல் ரகுமான் அவர்கள் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**வக்ஃப் சொத்துக்களை நில அளவை செய்தல்**

வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 4–இன் படி வக்ஃபு சொத்துக்களை சர்வே செய்வதற்காக நில அளவை ஆணையரை, வக்ஃப் நில அளவை ஆணையராக அரசு நியமனம் செய்தது. மாவட்ட வருவாய் அதிகாரிகள் கூடுதல் வக்ஃப் நில அளவை ஆணையர்களாக நியமனம் செய்யப்பட்டனர். வட்டாட்சியர்கள் உதவி வக்ஃப் ஆணையர்களாக நியமனம் செய்யப்பட்டனர்.

அரசு உத்தரவுப்படி மாவட்ட வாரியாக வக்ஃப் சொத்துக்களின் விவரங்கள், 1954–ஆம் ஆண்டு வக்ஃப் சட்டப்படி தயாரிக்கப்பட்ட வாரிய பதிவேடுகளில் இருந்து எடுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. வாரியம் அளித்த வக்ஃப் சொத்துக்களின் விவரங்கள் மாவட்ட வருவாய் அலுவலர்களால் பரிசீலிக்கப்பட்டு பின்னர் நில அளவை ஆணையரால் 27 மாவட்டங்களில் நில அளவை பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள மாவட்டங்களிலும் நில அளவை பணிகள் நடைபெற்று வருகின்றன.

**வக்ஃப் தீர்ப்பாயம்**

வக்ஃப்கள் மற்றும் வக்ஃப் சொத்துக்கள் தொடர்பாக எழும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஏதுவாக வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 83–ன்படி தலைவர் மற்றும் 2 உறுப்பினர்களை கொண்டு தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம் சென்னையில் அமைக்கப்பட்டு 06.08.2018 முதல் செயல்பட்டு வருகிறது.

**தமிழ் நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் வக்ஃப்கள்**

நிர்வாக காரணங்களுக்காக சில வக்ஃப்கள் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 65–ன் கீழ் கொண்டு வரப்படுகின்றன. இவ்வக்ஃப்களில் செயல் அலுவலர்கள் நியமிக்கப்பட்டு அன்றாட அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்பொழுது தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் 85 வக்ஃப்கள் உள்ளன. வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 45 (7)–ன் கீழ் நிர்வாக கட்டணம் அவ்வக்ஃபுகளிலிருந்து பெறப்படுகிறது.

**தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் வக்ஃப் சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுக்கும் நடவடிக்கைகள்**

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் ஆளுகையின்கீழ் இயங்கும் வக்ஃப் நிறுவனங்களின் வக்ஃப் சொத்துக்கள் தனி நபர்களால் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் போது வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 54–ன் படியும், தமிழ்நாடு பொது வளாக (முறைகேடான ஆக்கிரமிப்பினை அகற்றுதல்) சட்டம், 1975–ன்படி [Tamil Nadu Public Premises (Eviction of Unauthorized Occupants) Act 1975] அச்சொத்துக்களை மீட்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், தனி நபர்கள் வக்ஃப் சொத்துக்களை சட்ட விரோதமாக விற்பனை மற்றும் பரிவர்த்தனை செய்வதை தடுத்திட தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு பதிவு சட்டம், 1908 பிரிவு 22(A)–ன்படி ஆட்சேபனை கடிதங்கள் வழங்கப்பட்டு வக்ஃப் சொத்துக்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு அளிக்கப்படும் நிர்வாக மானியம்**

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நிர்வாக செலவுகளுக்காக தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் நிர்வாக மானியம் வழங்கி வருகிறது. தற்போது ஆண்டு நிர்வாக மானியமாக ரூ.2.50 கோடி ஒப்பளிக்கப்படுகிறது.

**மணவிலக்குப் பெற்ற முஸ்லிம் பெண்களுக்கான பராமரிப்பு**

முஸ்லீம் பெண்கள் (மணவிலக்கில் உரிமை பாதுகாப்பு) சட்டம், 1986 பிரிவு 4 (2)ன்படி, மணவிலக்கு பெற்ற முஸ்லிம் பெண்களுக்கு நீதிமன்ற தீர்ப்பின்படி தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தால் பராமரிப்பு செலவுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி ஆண்டுக்கு ரூ.67,800 வாரியத்திற்கு செலவினம் ஏற்படுகிறது.

**தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் அரசின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்**

**உலமா ஓய்வூதிய திட்டம்**

உலமா ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலுள்ள வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற வறிய நிலையில் உள்ள பேஷ் இமாம், மோதினார், அரபி ஆசிரியர் மற்றும் முஜாவர் ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறுவதற்கு 60 வயது நிரம்பிய மற்றும் 20 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் தகுதியுள்ளவர்களாவர். உலமா ஓய்வூதியத்தினை அங்கீகரிக்க மாண்புமிகு அமைச்சர் தலைமையில் குழு செயல்பட்டு வருகிறது. தற்போது உலமா ஓய்வூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ.3,000 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2,600 நபர்கள் பயன்பெற வழிவகை உள்ளது. தற்போது 1,263 நபர்கள் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

**பெரிய அளவிலான பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்பு மானியம்**

பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் இதர வக்ஃப் நிறுவனங்களின் பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்புக்காக தமிழ்நாடு அரசு மானியம் வழங்குகிறது. இத்திட்டத்திற்காக தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த மானியம் ரூ.60 இலட்சத்திலிருந்து ரூ.5 கோடியாக 2020-2021 ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 2020–2021 ஆம் ஆண்டில் ரூ.5 கோடி வழங்கப்பட்டு 45 வக்ஃப் நிறுவனங்கள் பயனடைந்துள்ளன.

**வக்ஃபு நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்பு பணிகளுக்கான தொகுப்பு நிதி**

வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.3 கோடியில் தொகுப்பு நிதி (Corpus fund) உருவாக்கப்பட்டுள்ளது.

**காஜிகளுக்கு மதிப்பூதியம் வழங்குதல்**

தமிழ்நாட்டில் பணியாற்றும் மாவட்ட காஜிக்களுக்கு மாதந்தோறும் ரூ.20,000 மதிப்பூதியம் தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

## 25. தமிழ்நாடு மாநில ஹஜ் குழு

தமிழ்நாடு மாநில ஹஜ் குழு 1958 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. ஹஜ் குழு சட்டம், 2002–ஐ (மத்திய சட்டம் எண்.35/2002) இயற்றிய பின்னர், ஹஜ் பயணம் சிறப்புடன் அமைய அதற்குத் தேவையான ஏற்பாடுகளை இந்திய ஹஜ் குழு மற்றும் ஒன்றிய அரசின் சிறுபான்மையினர் விவகாரத்துறை அமைச்சகம் ஆகியவற்றின் வழிகாட்டுதலுடன் செய்வதற்கும், ஹஜ் பயணிகளின் நலன் குறித்த பணிகளை மேற்கொள்வதற்கும் தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மாநில அரசால் அமைக்கப்படுகிறது.

தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவானது, அலுவல்சார் உறுப்பினராக செயலாளர் மற்றும் செயல் அலுவலருடன் சேர்த்து 12 உறுப்பினர்களை கொண்டு 2020–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் மூன்றாண்டு காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்டது.

நிர்வாகச் செலவினத்தை மேற்கொள்ள நிர்வாக மானியம், கட்டடத் தேர்வுக் குழுவில் பிரதிநிதிகளை அனுப்புதல் மற்றும் ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புதலுக்காக மேற்கொள்ளப்படும் செலவினத்திற்கான மானியம், மாநில ஹஜ் மானியம் மற்றும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்காக மானியம் முதலான பல்வேறு நோக்கங்களுக்காக தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவிற்கு, தமிழக அரசு மானியங்களை அளிக்கிறது.

2020–2021 ஆம் ஆண்டின்போது ஒப்பளிக்கப்பட்ட மானியங்களின் விவரங்கள் பின்வருமாறு:–

| | | | |
|---|---|---|---|
| (i) | நிர்வாக மானியம் | – | ரூ.50.00 இலட்சம் |
| (ii) | 21 ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்பியது மற்றும் கட்டடத்தேர்வுக் குழுவில் பிரதிநிதிகளை அனுப்பியதால் ஏற்பட்ட செலவினம். | – | ரூ.28,70,000/– |

**தமிழ்நாடு ஹஜ் பயணிகளுக்கு மானியம்.**

தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்ளும் தமிழ்நாடு ஹஜ் பயணிகளுக்கு மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்காக ஆண்டொன்றுக்கு வழங்கப்படும் மானியத் தொகை ரூ.6 கோடியிலிருந்து ரூ.10 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2019–2020 ஆம் ஆண்டில் 4,397 ஹஜ் பயணிகளுக்கு மானியம் வழங்கப்பட்டது. கொரோனா பெருந்தொற்று காரணமாக ஹஜ், 2020 மற்றும் 2021–க்கான பயணத்தை சவூதி அரேபியா அரசு இரத்து செய்துள்ளது.

---------